பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 03 ஞாயிற்றுக்கிழமை 20.08.2023 கதிர் 282

ஜனாதிபதித் தேர்தலுக்கான

# அடுத்த வேட்பாளர் நாமல் முன்னிறுத்துகிறது பெரமுன

## கட்சியின் செயலாளரே நேற்றுத் தெரிவிப்பு

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் இளம் தலைவரை களமிறக்குவதற்குத் தயார் என்று அவித்துள்ள பொதுஜன பெரமுனவின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி ஆகியோர், நாமல் ராஜபக்ஷ அதற்கு பொருத்தமானவர் என்றும் முன்மொழிந்துள்ளனர்.

பொது ஜன பெரமுனவின் மத்திய கொழும்பு தொகுதி மக்கள் சந்திப்பு நேற்றைதினம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

எமது நாட்டின் தலைமைத் துவத் ☞2

## இது ரகசியம் அல்ல!

இலங்கைதனதுகடன்களைமறுசீரமைப்புச் செய்வதற்கு இன்னும் ஒரு மாத கால அவகாசமே இருக்கின்றது. ஒக்டோபர் மாதத்திற்குள் அந்தப்பணிகளை முடிப்போம் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அது நடக்குமா என்பது பெரும் கேள்வியாகவே இருக்கின்றது. காரணம் சீனா.

இலங்கை கடன் வாங்கக்கூடிய எல்லா இடங்களிலும் கடன்களை வாங்கி வைத்துள்ளது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்று நிறுவனங்களிடம் மட்டுமல்லாது நாடுகளிடம் இருந்து நேரடியாகவும் கடன்களை வாங்கியுள்ளது. அப்படி நேரடியாகக் கடன் கொடுத்த நாடுகளில் சீனா, இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகியன முக்கியமானவை. கிட்டத்தட்ட இலங்கையின் அரைவாசிக்கும் மேற்பட்ட கடன்களை இந்த நாடுகளே வழங்கியிருக்கின்றன.

இவற்றில் சீனா மட்டும் 7.4 பில்லியன் டொலர் கடனை வழங்கியிருக்கிறது.

நாட்டின் பொருளாதார நிலை மோசமடைந்து, கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்ட பின்னர். அதிலிருந்து மீள்வதற்கு இலங்கையின் கடன் ☞2

## கொத்தலாவல பல்கலையை விரிவாக்குவதற்குத் திட்டம்

### சாகல நேற்று அறிவிப்பு

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைககழகத்தை விரிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்திற்கு வெள்ளிக்கிழமை வருகை தந்த அவர், முதலில் பல்கலைக்கழக மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள படைவீரர் நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

பல்கலைக்கழகத்தில் புதிதாக ☞2

## நாட்டின் தேசிய பாதுகாப்பை மீளாய்வு செய்ய ரணில் முடிவு

நாட்டின்தேசியபாதுகாப்பு தொடர்பான மீளாய்வொன்றை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அதற்காகமேஜர்ஜெனரல் (ஓய்வுபெற்ற) சன்ன குணதிலக்க தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு அதன் அறிக்கை கிடைத்த பின்னர் தேசிய பாதுகாப்பு சபையின் நவீன பாதுகாப்பு கொள்கைகளை தயாரிப்பதற்குநடவடிக்கைஎடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடற்படையின்தொண்டர்படையணிக்கு ஜனாதிபதி வர்ணம் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை பூஸ்ஸ கடற்படை உயர் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரத்திற்கு முன், ரோயல் கடற்படையின் தொண்டர் சேவையாக ஆரம்பிக்கப்பட்ட கடற்படைக்கு இரண்டாம் உலகப்போரின் போது கொழும்பு துறைமுகத்தை பாதுகாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப்பிறகு, நிரந்தர கடற்படை உருவாக்கப்பட்டது. இன்று நீங்கள் ☞2

## மீண்டும் பிரிவுகளை ஏற்படுத்தி அரசியல் செய்யப் பார்க்கிறார்கள்

### மக்கள் இடமளிக்கக்கூடாது என்கிறார் அனுர குமார

மீண்டும் நமக்குள்ளே பிரிவுகளை ஏற்படுத்தி தமது அரசியலை முன்னெடுக்க முனைகின்றார்கள். இதற்கு ஒரு போதும் இடம் அளிக்கக் கூடாது. அதிகாரத்தில் உள்ளவர்கள் தமக்குள் காணப்படும் பிரிவுகளை ஒருபோதும் வெளிப்படுத்துதில்லை. மக்கள் மத்தியிலேயே பிரிவுகளை ஏற்படுத்துவதற்காக தீவிரமாக செயற்படுகிறார்கள்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

காலியில் நேற்று நடைபெற்ற அக்கட்சியின் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவத்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகத்தை ஒவ்வொரு வடிவமாக பிரிக்கின்றனர். சிங்களம் தமிழ் என்று பிரித்தனர். பின்னர் தமிழர்களுக்குள்ளும் பிரிவுகளை ஏற்படுத்தினார்கள் சிங்களவர்களுக்கும் பிரிவுகளை ஏற்படுத்தினார்கள்.

ராஜபக்ஷக்கள் பதவிக்கு வருவதற்கு முன்னதாக புலிகளின் விடயத்தை கையில் எடுக்கவில்லை. ஆவா குழு விடயத்தினை கையிலெடுக் ☞2

## நல்லூரில் சிசிரிவி கமெராக்கள் பொருத்த ரூ. 14 லட்சம் செலவு

### ஆண்டு தோறும் நடக்கிறது

(ந.லோகதயாளன்.)

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தின்போதான சி.சி.ரி.வி கமரா கண்காணிப்பிற்காக 14 லட்சம் ரூபாவில் மாநகர சபைபொருள்கள்கொள்வனவு செய்துள்ளது.

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளதனால் பக்தர்கள் அதிகமாக்கூடுவர். இவ்வாறு திக பக்தர்கள் ஒன்றுகூடும் இடத்தில் பக்தர்கள் போன்று திருடர்களும்ஊடுருவுவதனால் அதனைக் கண்காணிக்க ஆண்டுதோறும் சி.சி.ரி கமரா பொருத்துவது வரமையாகும்.

இதற்கமைய இம்முறையும் கமரா பொருத்த கூறுவிலைகோரிய சமயம் எவருமே விண்ணப்பிக்காத நிலையில் கடந்த ஆண்டு பொருத்துவதற்கு ஏற்பட்ட செலவான 15 லட்சம் ரூபாவிற்குள் செலவைமட்டுப்படுத்த எண்ணி 14 லட்சம ரூபாவிற்கு கமரா மற்றும் அதற்கான வயர் உள்ளிட்ட பொருட்களை மாநகர சபை கொள்வனவு செய்துள்ளது.

இதேநேரம் மாநகர சபையால் பொருத்தப்படும் கமரா உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும் இலவசமாக வழங்க சுவிஸ் நாட்டின் ஓர் நிறுவனம் முன்வந்தபோதும் அவர்களின் உள் தோக்கம் அறிய முடியாது அதேநேரம் ஆலயத்தின் ☞2

## 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் வெளியேற்றம்

### கல்வியில் கடும் வீழ்ச்சி ஏற்படும் என்கிறது ஆசிரியர் சங்கம்

2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் பின்னர் இலங்கையிலிருந்து சம்பளமின்றி விடுமுறை பெற்று அல்லது சேவையிலிருந்து விலகி வெளிநாடுகளுள் ஐயாயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள் அடங்குகின்றனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் இலங்கை ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போது ☞10

## வடக்கிலும் 7 இடங்களில் சினோபெக் நிலையங்கள்

(ந.லோகதயாளன்.)

சினோபெக் எரிபொருள் நாடு முழுவதும் இன்று முதல் சந்தைக்கு வரும் நிலையில் வடக்கிலும் 7 எரிபொருள் நிலையங்களில் சீன எரிபொருள் விற்பனை இடம் பெறவுள்ளது.

சீன அரசின் சினோபெக் எரிபொருள் இன்று முதல் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நாடு முழுவதும் 150 எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் விற்பனை மேற்கொள்ள முடியும் ☞10

13 என்பது ஒரு நாடகம்; எனவே

## தமிழ் அரசியல்வாதிகள் எவரும் ரணிலின் பின் செல்லக்கூடாது

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

ஜனாதிபதி ரணிலின் அழைப்பின் பேரில் தமிழ் அரசியல்வாதிகள் அவர் பின்னால் செல்லக்கூடாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வெல்லாவெளியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஜனாதிபதித் தேர் தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் கட்சிகள் தமிழ் மக்களிடம் கேட்பதற்குக் காரணம் ஒன்றைக்கூறவேண்டியிருக்கின்றது. அதற்காக ஜனாதிபதி ☞2

## பொது ஜன பெரமுனவில் ஒரு தரப்பு பஸிலை ஆதரித்து அவர் பின்னால்

அடுத்து எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அதில் பொது ஜன பெரமுனவின் தாமரை மொட்டுச் சின்னம் காணப்படுவதோடு, பஷில் ராஜபக்ஷ தலைமையகத்தில் அமர்ந்திருந்து அதற்கான அத்திபாரத்தினை மீண்டும் தாபித்துள்ளார் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ மற்றும் சஞ்சீவ எதிரிமான்ன ஆகியோர் தெரிவித்தனர்.

பொதுஜனபெரமுனவின் மத்திய கொழும்பு தொகுதி மக்கள் சந்திப்பு நேற்றைதினம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்ததாவது: 2022 மே-9ஆம் திகதி எம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு நாம் ஜனநாயக ரீதியில் பதிலளித்து விட்டோம். பஷில் ராஜபக்ஷ நெலும் மாவத்தையில் உள்ள கட்சியின் தலைமையகத்திலிருந்து கட்சியை மீண்டும் பலப்படுத்தி விட்டார்.

அண்மையில் ☞2

## தேசிய வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்க எதிரணி தயார்

### சஜித் நேற்று விசேட அறிவிப்பு

‘நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்குத் தேசிய ஒருமைப்பாடு மற்றும் இணக்கப்பாடு கொண்ட தேசிய வேலைத்திட்டமொன்று அவசியம். அவ்வாறான வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்கத் தயார்.‘

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள விசேட அறிவிப்பில் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் பொருளாதார மற்றும் சமூக அழிவு நடைபெற்று வருகின்றது. சுமார் 60 ஆயிரம் குடும்பங்கள் சுத்தமான குடிதண்ணீரை இழந்துள்ளன. வறட்சி காரணமாக இலட்சக் கணக்கான ஹெக்டெயர் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளன. விவசாயிகள் உட்பட ஒட்டுமொத்த உழைக்கும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

5 ஆயிரம் பாடசாலை ஆசிரியர்களும் ஏராளமான மருத்துவ நிபுணர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இதனால், மருத்துவமனைகளின் வார்ட் தொகுதிகள் மூடப்பட்டு அறுவைச் சிகிச்சைகள் கூட இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் இணக்கப்பாடு கொண்ட தேசிய வேலைத்திட்டமொன்று அவசியம்.

வீழ்ந்த நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டம் அரசிடம் இருந்தால், எதிர்க்கட்சியாக அனைவரும் அதிகபட்ச ஆதரவை வழங்க விரும்பினாலும் அவ்வாறான வேலைத் திட்டமொன்று தற்போதைய அரசிடம் இல்லை .

அரசு விளையாடும் இந்த அரசியல் சூதாட்டங்களைத் தவிர்த்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். இதற்கான அறிவு அரசுக்கு ☞2

## ரணிலை வெல்ல வைப்பதற்கு மொட்டு அயராது பாடுபடும்

### நிமல் லன்சா எம்.பி. சபதம்

‘ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்குப் பாடுபடுவார்கள். மக்கள் ஆணையற்ற சிலரின் கருத்துக்களை மக்கள் நிச்சயம் நிராகரிப்பர்.‘

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார் என்று அக்கட்சியின் ஒரு தரப்பினர் வெவ்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். முடிந்தால் பொதுஜன பெரமுனவில் களமிறக்கப்படவுள்ள ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

களைமீள்கட்டமைப்புஅல்லது மறுசீரமைப்புச் செய்வது தேவையாக இருக்கின்றது. அதாவது, வாங்கிய கடனில் ஒருபகுதியைமீளச்செலுத்தத் தேவையில்லை என்கிற சலுகையை அல்லது குறிப்பிட்ட வருடங்களுக்கு வட்டியைச் செலுத்தத் தேவையில்லைஎன்கிறசலுகையை அல்லதுகடன்வாங்கியபோது இருந்தவட்டியைகுறைப்பது அல்லது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை நீடிப்பது என்பவற்றில் ஒன்றிரண்டையோ அல்லது எல்லாவற்றையுமோ கூட மேற்கொண்டு இலங்கையைத் தற்காலிகமாகவேனும் கடன் சுமையிலிருந்து தூர விலக்கி வைத்தால்தான் அதனால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளமுடியும்.

இதற்காகவே கடன் மறுசீரமைப்பு முக்கியம் பெறுகின்றது. சர்வதேச நாணயநிதியம்இலங்கைக்கு கடன் வழங்க முன்வந்த போது, இந்தக் கடன் மறுசீரமைப்புக்கான உத்தரவாதத்தை கடன் வழங்கியவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டுதான் வழங்கியது. அப்படியில்லை என்றால் தான் வழங்கும் கடன் இலங்கைக்குப் பயன்படாது என்பது அதற்குத் தெரியும்.

கடனை மறுசீரமைப்பது தொடர்பில்இந்தியா, ஜப்பான், பிரான்ஸ்ஆகியனஓரணியில் இணைந்திருக்கின்றன. இவை ஒரு பொதுத் தளத்தில் கடன்மறுசீரமைப்புக்குறித்து விவாதித்து முடிவுகளை எடுப்பதற்கு இணங்கியிருக்கின்றன. இதில் சீனா இப்போதுவரைக்கும்பார்வையாளராகவே இருந்து வருகின்றது.

இந்தப் பொதுத் தளத்தினுள் நுழைந்து கடன் மறுசீரமைப்பை சீனா எளிதாக்கவேண்டும் என்று இலங்கையும் எவ்வளவோ மன்றாடிப் பார்க்கின்றது. ஆனால் சீனா அதற்கு இணங்கிவருவதாகஇல்லை. ஜனாதிபதி, நிதி அமைச்சு, பிரதமர்என்றுபலதரப்புகளில் இருந்தும் இது தொடர்பில் சீனாவிற்குபலகோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும் சீனா அதற்குச் செவிசாய்க்கவில்லை.

பிரான்ஸ் அதிபர் மக்ரோன் தனது பயணத்தின் இடையே இலங்கை விமான நிலையத்தில் ஓய்வுக்காகத் தங்கியிருந்தபோது அங்கு சென்று அவரைச் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது விடயத்தில் சீனாவை வழிக்குக் கொண்டுவர உதவும்படி பிரான்ஸ்அதிபரிடமும்மன்றாடினார். அவரும் தான் சீனாவுடன்பேசிப்பார்க்கிறேன் என்று வாக்குறுதியளித்தார். ஆனால் இதுவரை அதற்கும் பயனேதுமில்லை.

அண்மையில் சீனாவிற்குச் சென்றிருந்த பிரதமர் தினேஸ் குணவர்த்தனவும் அங்கு சீனத்தலைவர்களைச்சந்தித்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார். ஆனாலும் பயனேதும் இல்லை. கடன் மறுசீரமைப்புக்கான பொதுத் தளத்திற்குள் நுழைய சீனா அடியோடு மறுத்து வருகின்றது. அது மட்டுமல்ல கடன் மறுசீரமைப்பு என்கிற சொல்லையே மாற்ற வேண்டும் என்று அடம் பிடிக்கிறது சீனா. கடன் முகாமைத்துவம் என்றுதான் அதனைச்சொல்லவேண்டும் என்கிறது.

சீனாவைத் தனித்து விட்டால் அதன் கடன் மறுசிரமைப்புக்களை இலங்கை தனியாகக் கையாள முற்பட்டால் மற்றைய நாடுகள் அதிருப்தி அடைந்து ஒத்துழைக்க மறுப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு. இதனால் அனைத்து கடன் மறுசீரமைப்பும் ஒன்றாக அதாவது ஒரே மாதிரியானவையாகஇருக்கவேண்டும் என்று இந்தியா, ஜப்பான் நாடுகள்வலியுறுத்துகின்றன.

ஆனால் சீனாவோ பொதுவான இணக்கத்துக்கு ஒத்து வருவதாக இல்லை. இதனால் அடுத்துவரும் மாதங்கள் ஜனாதிபதிக்கு பெரும் சிக்கலான காலப் பகுதியாகவேஅமையும்என்று எதிர்பார்க்கலாம். இந்தத் தடையை அவரால்தாண்ட முடியாது நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்ளலாம். சீனா வழங்கிய கடன் இப்போது மெல்லமெல்லஒருபொறியாக விரிவது போன்றுதான் தோன்றுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு மிகவும் திறமையான இளம் தலைவர் ஒருவர் தேவைப்படுகின்றார். அதற்கான காலம் தற்போது ஏற்பட்டுள்ளது என்றார் சாகர காரியவாசம்.

நவீன காலத்திற்கு நாட்டினை முன்னெடுத்துச் செல்லக்கூடிய தலைவர் ஒருவர் அவசியமாகின்றார். அந்த வகையில் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன இளையவர்ஒருவருக்குதலைமைத்துவத்தினைப் பெற்றுக் கொடுக்கத் தயாராகவே உள்ளதுஎன்றும்தெரிவித்தார்.

திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவிக்கையில், இளைஞர்கள் என்ற அடிப்படையில் நாம் பொருத்தமில்லாதவர்களை முன்னிறுத்தப் போவதில்லை. இளைஞர் என்று வருகின்றபோது நானும் இளைஞர் என்ற வகைக்குள்ளேயேவருவேன் என்பதை மக்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

நாங்கள்கடந்தகாலங்களில் முன்னாள் ஜனாதிபதிகளின் புதல்வர்களைக் கண்டுள்ளோம். அவர்கள் குழந்தைகளைப் போன்றவர்கள்.

அவ்வாறிருக்கையில், அன்பான அப்பச்சியான மஹிந்தராஜபக்ஷவின்புதல்வாரான நாமல் ராஜபக்ஷ இளையவரும் திறமையானவருமாவார். அவர் இளம் தலைவராகச் செயற்படுகின்றார். அவரிடத்தில் எவ் வேளையிலும் நாட்டை ஒப்படைக்க முடியும்.

தற்போது பிரேமதாசவின் புதல்வர் சஜித் உள்ளார். அவர் தேர்தலை நடத்துமாறு கோருகின்றார். ஆனால் தேர்தல் நடத்தினால் அவருடைய நிலைமைஎவ்வாறுஇருக்கும்? எம்மைப்பொறுத்தவரையில் நாம் எந்தத் தேர்தலையும் சந்திப்பதற்கு தயாராகவே உள்ளோம் - என்றார்.

## கொத்தலாவல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்மாணிக்கப்பட்டுள்ள பகுப்பாய்வுக் கூடத்தை (Analytical Laboratory) திறந்துவைத்த சாகல ரத்னாயக்க, பல்கலைக்கழக மைதானத்தில் கட்டப்பட்டு வரும் கேட்போர் கூடத்தின் நிர்மாணப் பணிகளையும் பார்வையிட்டார்.

அதன் பின்னர், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக உபவேந்தர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பல்கலைக்கழக அதிகாரிகள் குழுவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

நீங்கள் பேணி வரும் தரநிலைகள், கல்வியின் தரம் மற்றும் நீங்கள் வழங்கும் முழுமையான கல்வி அனுபவம் குறித்து நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். எனது மருமகன் இங்கு சட்டம் மற்றும் குற்றவியல் பீடத்தில் பயின்றார்.

அவர்இந்தநிறுவனத்தை தெரிவு செய்ததற்குப் பிரதான காரணம் இங்கு கடைபிடிக்கப்படும் ஒழுக்கக் கட்டுப்பாடுதான். அவர் வேறு பல்கலைக்கழகத்திற்குச் செல்ல விரும்பவில்லை, பல்வேறு காரணங்களுக்காக வீதிகளில்நின்றுஆர்ப்பாட்டம் செய்வதை அவர் விரும்பவில்லை.

எமது நாட்டை முன்னேற்றுவதற்கு இது போன்ற கல்விமுறைதான் அவசியமானது. உண்மையிலே இந்தநாட்டிற்கு, இளைஞர்கள் எதிர்கொள்ளும்சவால்களை புரிந்துகொள்ளும்வகையில் மனப்பான்மை மாற்றம் உருவாக்கப்பட வேண்டும்.

நாம்வெளவேறுசமயங்களில்பல்வேறு சவால்களை எதிர்கொண்டுவந்த போதும் நாம் தற்போது சரியான பாதையில் பயணிப்பதாக நினைக்கிறேன். இந்தப் பாதையில் நாம் தொடர்ந்து சென்றால், நாம்கனவுகண்ட சிங்கப்பூரைப் போன்று இலங்கையையும் சிறந்த நிலைக்கு உயர்த்தலாம்.

சட்டம் இயற்றப்பட வேண்டிய சமயத்தில் சட்டம் இயற்றுவதும், ஒழுங்குபடுத்த வேண்டிய இடங்களை ஒழுங்குபடுத்துவதும், மேற்பார்வையில் இருந்து நீக்க வேண்டியவற்றைநீக்குவதும் இங்கு முக்கியமானது.

எனவே பொருளாதாரத்தில்உள்ளதேவையற்ற கண்காணிப்புகளை நீக்கி, திறந்து விட வேண்டும். அத்தோடு தற்போதுள்ள சட்டங்கள், சட்டவிரோத பணப்பரிமாற்ற கண்காணிப்பு , நிதி விசாரணைகள் போன்றவற்றின் தரத்தை மீள உறுதி செய்ய வேண்டும்.

சட்டம், ஒழுங்கு மற்றும் தேசிய பாதுகாப்பு குறித்து நாங்கள் அதிக அக்கறை கொண்டுள்ளோம். அதில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கவிசேடபங்கு இருக்கிறது. நமது இளைஞர், யுவதிகளுக்காக புதியகல்விமுறைகளைஉருவாக்கப்பட்டு வருகின்றன.

துறைமுகநகரம்மற்றும் நிதிமையம்நிறுவப்பட்டதும், எமதுநோக்கங்களைப்பூர்த்தி செய்துகொள்வதற்காகநமது முறைமைகளை அதற்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும்.நிதிச்சந்தைகளும் அதற்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும்.

செயற்கை நுண்ணறிவைப்பயன்படுத்துவதற்காக தரமானகல்விமுறைமையை ஏற்படுத்த வேண்டியது மிகவும் பயனுள்ளதாக அமையும். தேவையான அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் முழுமையான வளர்ச்சித் திட்டத்தை முன்வைக்க எதிர்பார்க்கிறோம். ஆனால் அதனை கட்டம்கட்டமாகவே செய்ய வேண்டும். ஏனென்றால், நாம் எதிர்கொள்ள வேண்டிய பொருளாதார நெருக்கடியில் இதையெல்லாம் ஒரே நேரத்தில் செய்ய முடியாது.

நாம்முன்னோக்கிச்செல்லும்போதுசிலமாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும். நாம் அதைச் சரியாகச் செய்துவருகிறோம்.நமக்குத் தேவையான அறிவைப் பெற்று, உள்ள அறிவைக் கொண்டு முன்னேறிச் செல்லவேண்டும். குறிப்பாக கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் இங்கு முன்னோடியாக இருக்க வேண்டும்.

இங்கு கல்வி கற்ற மாணவர் ஒருவர் அரச தொழில் பெறுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின்பின்னால்செல்லும் நிலை காணப்படுமாக இருந்தால் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தோல்வியடைந்து விட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த முறைமையை நாம் மாற்ற வேண்டும்.

அரச பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறிய பட்டதாரிகள் ஒவ்வொருவரும் அரச தொழில்கிடைப்பதுகட்டாயம் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார்கள். இது மிகவும் தவறான அணுகுமுறையாகும். மனப்பாங்குரீதியான மாற்றம் ஏற்பட வேண்டும்.

கொத்தலாவலபாதுகாப்பு பல்கலைக்கழக சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். மாணவர் தொகையை அதிகரிப்பது குறித்தும் ஆராயப்படுகிறது.

அதன் கிளைகளை குருணாகல், பொலன்னறுவைமற்றும்கொழும்பில் ஆரம்பிப்பது பற்றி கவனம் செலுத்தியுள்ளோம். இது தொடர்பில்உங்களுக்குவேறு முன்மொழிவுகள் இருந்தால் செவ்வாய் கிழமைக்கு முன்னர்அதனைச்சமர்ப்பிக்க முடியும் - என்றார்.

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவில்லை. மாறாக மலட்டுத்தன்மை ஏற்படுத்துகின்ற கொத்து, ஆடைகள், வைத்தியர்கள் சம்பந்தமான விடயங்களை மேலெடுத்தார்கள்.

தற்போதும்அவ்விதமான விடயங்கள் மீண்டும் உருவாக்கப்படுகின்றதாஎன்ற சந்தேகம் எனக்கு உள்ளது. அண்மைய நாட்களில் நடைபெறுகின்றசம்பவங்கள் அந்த சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளன.

குறிப்பாக மகா விகாரையில் தேரவாத பௌத்தம் சம்பந்தமான பல்கலைக்கழகம்ஒன்றுநிறுவப்படுமென ஜனாதிபதி கூறுகிறார். அங்கு தேரர்கள் அழைக்கப்பட்டு உரையாடல்கள் நடைபெறுகின்றன. அதேபோல 13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமான விவகாரம் முன்னெடுக்கப்படுகிறது. ஆனால் அதற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கொண்டிருக்கின்ற கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

நடைபெறாதஒருவிடயம் திடீரென மேலே கிளப்பி விடப்படுவதற்கு என்ன காரணம்? இப்பொழுது குருந்தூர் மலைக்கு உரித்துக்கோரும் விவகாரம் நடைபெறுகிறது. இவை எல்லாம் திடீரென்று ஏற்படுகின்ற விடயங்கள் அல்ல. இவை அனைத்தின் பின்னாலும் காரணங்கள் உள்ளன. இதனை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

மீண்டும் நமக்குள்ளே பிரிவுகளை ஏற்படுத்தி தமது அரசியலை முன்னெடுக்க முனைகின்றார்கள். இதற்கு ஒரு போதும் இடம் அளிக்கக் கூடாது.

அதிகாரத்தில் உள்ளவர்கள் தமக்குள் காணப்படும் பிரிவுகளை ஒருபோதும் வெளிப்படுத்துதில்லை. மக்கள் மத்தியிலேயே பிரிவுகளை ஏற்படுத்துவதற்காகதீவிரமாக செயற்படுகிறார்கள். இதனைப் புரிந்து கொள்ளவேண்டும்.

இதுபோன்றே உயிர்த்த ஞாயிறுசம்பவமும்திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டது. அதன் பின்னர் நடைபெற்ற விசாரணைகளின்போது ஒரேகணக்கிலக்கத்திலிருந்து இரண்டு தரப்பினருக்கும் பணம் செலுத்தப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. இதன்மூலம்உண்மையான பிளவுகள் மறைக்கப்பட்டு புதிது புதிதாக பிளவுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் - என்றார்.

## பொது ஜன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் உள்ளூராட்சி பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடியுள்ளார். அடுத்த தேர்தல்எதுவாகஇருந்தாலும், அந்த தேர்தல் வாக்குச் சீட்டில் நிச்சயமாக பொதுஜன பெரமுவின்சின்னமான தாமரை மொட்டு காணப்படுவது உறுதியான விடயமாகின்றது - என்றார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோதெரிவித்ததாவது: பஸில் ராஜபக் ஷ கட்சித் தலைமையத்திலிருந்து கொண்டு கட்சியை கீழ் மட்டத்திலிருந்து சரியாக வழி நடத்துகின்றார்.

கடந்த வருடம், ஜனநாயக விரோதிகள், கபுடு கா... கா.. என்று ஒலிகளை தொடர்ச்சியாக எழுப்பினார்கள். அதற்கு காரணம் பஸில் ராஜபக்ஷ திறமையானவர் என்பதுதான். அவர் மீதுசேறுபூசுவதேஅவர்களின் நிலைப்பாடாகும்.

தற்போதைய நிலையில் நாம்எந்தவொருதேர்தலுக்கும் முகங்கொடுப்பதற்கு தயாராகவே உள்ளோம். சில உள்ளூராட்சி மன்றங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம். கொழும்பு மாநாகர சபையிலும் அதேதான் நிலைமை - என்றார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்கவால் தற்போது தமிழ்க்கட்சிகளுடன் பேச்சு நடத்துவது போன்ற நாடகம் அரங்கிடப்படுகிறது.

அந்த நாடகத்தில் ஒற்றையாட்சியின் கீழ் 13ஆவது திருத்தச்சட்ட அமுலாக்கம் பற்றியே பேசப்படுகின்றது. அத்துடன் அதனொரு அங்கமாக மாகாண ஆலோசனை சபை என்ற விடயம் முன்வைக்கப்படுகின்றது. மாகாண ஆலோசனைசபைஎன்பதற்கு சட்டத்தில் எந்த விதமான ஏற்பாடுகளும் கிடையாது.

அந்தக் கட்டமைப்பில் மாகாணத்தில் உள்ள மக்கள் பிரதிநிதிகளும், மக்கள் பிரதிநிதிகள் அல்லாதவர்களுமாக அனைவரும் பங்கேற்க முடியும். இது ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரமாகும்.

அவர்தன்னுடையகட்சி பிரதிநிதிகளையும் தமிழ்க் கட்சிகளின் வாக்குகளை பெறுவதற்காக ஈடுபடுத்த முயல்கின்றார். அத்துடன் அவருடன் இணைந்து செயற்பட்டுத் தேர்தலில் தோல்வியடைந்த தமிழ் அரசியல் கட்சியின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தவே முனைகிறார்.

இதன் மூலம் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தி இழக்கப்படுகிறது. அதனால் எவ்விதமான நலன்களையும்தமிழ் மக்கள் பெறப் போவதில்லை.

ஆகவே தமிழ் அரசியல்வாதிகள் பேச்சுக்குச் செல்லக்கூடாது ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பிரகாரம் அவர் பின்னால் செல்லக்கூடாது.

தமிழ் மக்களின் வாக்குகள் மூலம் கிடைத்த அங்கீகாரத்தின் ஊடாக அவர்களின் எதிர்காலத்தை பாழக்கும் செயற்பாடுகளை ஏன் தமிழ் அரசியல்வாதிகள் முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சியிலிருந்து வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கும் என்றும், அதற்காக மூன்றெழுத்துபெயர்கொண்ட தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் ஒரு தரப்பினர் குறிப்புக்களை வழங்கி மக்களை ஏமாற்றி வருகின்றதனர்.

முடிந்தால் சகல தரப்பினரதும் இணக்கப்பாட்டுக்கமைய பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்குமாறு சவால் விடுக்கின்றோம்.

நாட்டில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலைமையால் தோன்றிய நெருக்கடிகளிலிருந்தும், நாட்டை மீளக் கட்டியெழுப்பிபொருளாதார, சமூக மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக் கொடுத்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்கள், மக்கள்ஆணையற்ற பொதுஜனபெரமுனவின்சில உறுப்பினர்களுக்கு மறந்து போயுள்ளது.

மீண்டும்அவர்கள்தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குவழியேற்படுத்திக் கொடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தைமறந்து அந்த கட்சியின் சில உறுப்பினர்கள்செயற்படுகின்றமை கவலைக்குரியதாகும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமின்மைமற்றும்நெருக்கடிகளை தீர்த்து நாட்டில் ஸ்திரத்தன்மையைக்கட்டியெழுப்பக்கூடிய ஒரே தலைமைத்துவமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு காணப்பட்ட ஒரேயொரு தெரிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே.

இவ்வாறான நிலையில் நாட்டில்ஏற்பட்டபொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்து சர்வதேசத்தின் ஆதரவுடன் நாட்டைக் கட்டியெழுப்பி பொருளாதார, சமூக, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திய தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது நாட்டு மக்கள் மத்தியில் நம்பிக்கைக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

முற்போக்கான பார்வையுடனும், சர்வதேசத்தின்ஒத்துழைப்புடனும்இலங்கையை மீண்டும் முன்னோக்கிக் கொண்டு செல்லக் கூடிய இயலுமை கொண்ட ஒரேயொரு தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே. இது தொடர்பில் பரந்துபட்ட புரிந்துணர்வு கொண்ட பொதுஜன பெரமுனவின்பெரும்பான்மையானவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்குப் பாடுபடுவார்கள். மக்கள் ஆணையற்றசிலரின்கருத்துக்களை மக்கள் நிச்சயம் நிராகரிப்பர்.' - என்றார்.

## நல்லூரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் மாநகர சபைக்கு வருமானம் கிட்டுவதனால் அந்த நிதியில் கமெராக்கள் கொள்வனவு செய்யப்படும் எனத் தெரிவித்து மாநகர சபை 14 லட்சம் ரூபாவிற்கு கமரா கண்காணிப்பு உபகரணங்களை கொள்வனவு செய்துள்ளது.

நல்லூர் திருவிழாக் காலங்களில் ஒவ்வொரு ஆண்டும்இவ்வாறு15லட்சம் ரூபாய்க்கு கமெரா மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையென்றால், எதிர்க் கட்சியிடம்இருக்கும்இதற்குத் தேவையான அறிவையும், மனித வளத்தையும்வழங்க விரும்புகின்றோம்.

பதவிகளுக்கு அடிமைப்பட்டுநாட்டையும்மக்களையும் காட்டிக்கொடுக்க நாம் தயாரில்லை. இது போன்ற தேசத்துரோகச் செயல்களை நீங்கள்செய்யவிரும்பினால், வேறுயாரையாவதுபார்த்துக் கொள்ளுங்கள். நாட்டின் தேசியநலனைப்புறந்தள்ளி விட்டுபெருந்தீனிஅரசியலைப் பின்பற்றஐக்கியமக்கள் சக்தி தயாராக இல்லை - என்றார்.

## நாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தகைய வரலாற்றைக் கொண்ட சிறப்புவாய்ந்த இராணுவக் குழுவில் இணைகிறீர்கள்.

ஆரம்பத்தில்எங்களுக்கு கடல்சார்ந்த அச்சுறுத்தல்கள் இருக்கவில்லை. இந்து சமுத்திரம் முழுவதுமாக பிரிட்டிஷ் கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தக் கடற்படை இந்து சமுத்திரத்தைவிட்டுவெளியேறியபிறகு எங்களுக்குஎந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால் 1983 இற்குப்பிறகுநாம்ஒருபோரை எதிர்கொள்ள நேரிட்டது.

அன்று விடுதலைப் புலிகள் அமைப்பு படகுகள் மூலம் தனது திறமையை வெளிப்படுத்தியது. கடல் அவர்களுக்கு புதிய அனுபவமாகஇருக்கவில்லை. ஆனால் எங்களுக்கு கடலைப் பற்றி கற்க வேண்டியிருந்தது. சில காலத்திற்குப் பிறகு, எமது பாதுகாப்புப்படைகளின் அர்ப்பணிப்பும் திறனும் காரணமாக கடற்புலிகள் அமைப்பை ஒழிக்க முடிந்தது. நமது கடற்படைக்குஇத்தகையபோர்களை செய்ய திறமையிருப்பதாக அங்கீகாரம் கிடைத்தது.

சோமாலியாவில் இத்தகைய குழுக்களைக் கட்டுப்படுத்த, உலகின் பல பிரதான கடற்படைகள் தேவைப்பட்டன. ஆனால் இதை எங்களால் தனியாக செய்ய முடிந்தது. யுத்தம் நிறைவடைந்து தற்போது 14 வருடங்கள் கடந்துள்ளன. இப்போது நாம் நிகழ்காலம் குறித்தும் எதிர்காலம் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.

எமக்கு 2009 அல்லது 1983 இல் காணப்பட்ட நிலைமை இன்று மாறியுள்ளது. உலக வல்லரசுகளின் போராட்டம்இந்துசமுத்திரதில் மையம் கொண்டுள்ளதால் அதனை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஒருபுறம், பசிபிக் சமுத்திரத்தில் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையே அதிகாரப் போட்டி உள்ளது. மறுபுறம், உக்ரைன் மற்றும் மேற்கு ரஷ்யா இடையே அதிகாரப் போட்டி உள்ளது. அந்த அதிகாரப் போராட்டமானது எமது இராணுவம் பணியாற்றும் மாலி நாட்டின் அண்டை நாடான ஆபிரிக்காவின் நைஜர் நாட்டையும் எட்டியுள்ளது.

உலகின் மிக முக்கியமான வர்த்தகப் பாதை இந்து சமுத்திரத்தில்தான் அமைந்துள்ளது. இலங்கைஅதில்ஒரு

தொடர்ச்சி 10ம் பக்கம்....

Get assistance for Australian Visa:
Skilled Migration Visa
Skilled Recognised Graduate Visa
Student Visa
Visitor Visa
Contact for more information:
Australian Migration Consultants
0112437285, 0724650399
sl.austvisa@gmail.com
0766228891, 0769077757, 0758336540

Face of Jaffna
கறுவா, சந்தனம், கராம்பு, கோப்பி, கொக்கோ, மிளகு ஆகிய மரக்கன்றுகள் விற்பனைக்கு உள்ளன.
076 443 8620
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# 13 திருத்தம் தொடர்பில் சஜித் இரட்டைவேடம்

## பிரபா கணேசன் சாடுகிறார்

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 13 ஆவது திருத்தம் தொடர்பில் இரட்டை வேடம்போடுவதாக ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு, பம்பலப்பிட்டியிலுள்ள ஜனநாயக மக்கள் காங்கிரஸ் காரியாலயத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பது மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் செயலாக இருப்பதோடு அது மனித உரிமையை மீறும் செயலாகவும் பார்க்கப்படுகின்றது.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது இந்திய அரசாங்கம் அவரிடம் 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறும், மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும் வலியுறுத்தியிருந்தது.

மாகாண சபைத் தேர்தல் என்றுகூறும்போது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் சம்பந்தமாக ஜனாதிபதி இன்று பேசிக்கொண்டிருக்கின்றார்.

வடக்கு, கிழக்கைச்சார்ந்த தமிழ்க் கட்சிகளை அழைத்து மாகாண சபைத் தேர்தலில் பொலிஸ், காணி அதிகாரம் சம்பந்தமாகப் பேசுகின்றார் என்றால் உண்மையிலேயே ஏற்கனவே அவர்களுக்கு சொல்லி வைத்ததுபோன்று வடக்கு, கிழக்கில் உள்ள அரசியல்வாதிகள் பொலிஸ், காணி அதிகாரங்கள் தமக்கு வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றுகொண்டிருக்கின்றார்கள். இது ஜனாதிபதி எதிர்பார்த்த ஒன்றாகத்தான் நான் பார்க்கின்றேன்.

அதேபோல் தென்னிலங்கையில் சரத் வீரசேகர போன்றவர்களிடம் பொலிஸ், காணி அதிகாரங்களை வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள் கேட்கின்றார்கள் என்று சொல்லும்போது அவர் பௌத்த ஆலயங்களுக்குச் சென்று வேறுவிதமான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்.

ஆகவே, ஜனாதிபதி ரணில் இவ்வாறான பிரச்சினைகளை உருவாக்கி தேர்தலை பிற்போடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

இந்நிலையில் ஜனாதிபதியிடம் நாங்கள் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகின்றோம், 'முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள். அதற்கு பின்பு பொலிஸ், காணி அதிகாரங்களை பேசலாம். ஏனெனில், கடந்த காலங்களில் இருந்த மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

ஆகவே, முதலில் தேர்தலை நடத்திவிட்டு பின்பு அனைத்து கட்சிகளையும் அழைத்து பொலிஸ், காணி அதிகாரங்கள் சம்பந்தமாக பேச்சு நடத்தி ஒரு முடிவுக்கு வரலாம். தேர்தலை பிற்போடுவதற்கான எந்தவிதமான முயற்சிகளையும் எடுக்காமல், உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என நான் கேட்டுக்கொள்கின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேடதாரி போல் நடந்துகொள்கின்றார். நாடாளுமன்றத்தில் சொல்கிறார் தாம் 13 இற்கு ஆதரவாக இருக்கின்றோம் என்று, அதேநேரம் மகா சங்கத்தினரை சந்தித்து அங்கே 13 ஆம் திருத்தத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் சம்பந்தமாக நீங்கள் தான் முடிவெடுக்க வேண்டும் என்று அவர்களிடம் சொல்கிறார்.

எனவே இவ்வாறு இரட்டை வேடம் போடுவதை நிறுத்திவிட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன். - இவ்வாறு பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். (05)

# நரேந்திர மோடியிடமிருந்து பாடத்தை கற்றுக்கொள்க

## லக்ஷ்மன் கிரியெல்ல இடித்துரைப்பு

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை முன்னுதாரணமாகக் கொண்டு, ஜனாதிபதி செயற்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தினார்.



கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மொட்டுக் கட்சியின் அரசாங்கம் தான் இந்த நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு இட்டுச் சென்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இன்று பிற்போடப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு பயந்த ஓர் அரசாங்கத்தால் நாட்டை நிர்வகிக் முடியுமா? இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடமிருந்து இவர்கள் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

கொரோனா உச்சத்தில் இருந்த காலத்தில், 5 மாநிலங்களுக்கும் அவர் தேர்தலை நடத்தினார். இவற்றில் அவர் தோல்வியடைந்தார். பின்னர் கொரோனாவை சரியான முறையில் கட்டுப்படுத்தி, நாட்டை முன்னேற்றிவிட்டு மீண்டும் மாநிலங்களுக்கு தேர்தலை நடத்தினார். இந்தத் தேர்தலில் அவர் வெற்றியும் பெற்றார்.

ஓர் அரசியல் தலைவர் என்றால் இப்படிதான் சவால்களை எதிர்க்கொள்ள வேண்டும்.

மாகாணசபைத் தேர்தலை நடத்த, எந்த பிரேரணையைக் கொண்டுவந்தாலும் நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற ஆதரவளிப்போம் என்று ஜனாதிபதியிடம் உறுதியளித்திருந்தோம். ஜனநாயகம் இல்லாத ஒரு நாட்டுக்கு சர்வதேசம் உதவ முன்வராது. ஐ.எம்.எப். எமக்கு உதவி செய்தாலும், ஜனநாயகத்தை நிலைநாட்ட அரசாங்கம் எவ்வாறு செயற்படுகிறது என்பதை அவர்கள் தீவிரமாக அவதானித்துக் கொண்டுதான் இருப்பார்கள்.

இது அவர்களின் நிபந்தனைகளில் ஒன்றாகவும் இருக்கிறது. எனினும், அரசாங்கம் இந்த நிபந்தனையை மீறித்தான் தற்போது செயற்பட்டு வருகிறது. - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் உரிய அனுமதியின்றி வெளியேற்றமாம்

## ஜோசப் ஸ்டாலின் கூறுகிறார்




ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் உரிய அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது நாட்டிலுள்ள கல்வித்துறையில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.

உரிய அனுமதி இன்றி 5000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நாட்டிலிருந்து வெளியேறி இருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் அரச ஊழியர்கள் 5 வருட விடுமுறையில் வெளிநாடுகளுக்குச் செல்லலாம் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதற்கமைவாக கல்வித்துறையில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் இந்த விடுமுறையை பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தார்கள்.

இந்த நிலையை ஏற்படுத் தியது அரசாங்கம். இவ்வாறு கல்வி துறையில் இருந்து வெளியேறியுள்ள ஆசிரியர்களின் வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள மாகாண சபைகளுக்கு அனுமதி வழங்குவதாகக் கூறப்படுகின்றது.

இதன்மூலம் அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பார்களா? அடுத்த வருடம் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறாது என்று நிதி அமைச்சு செயலாளர் சுற்றறிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

அவ்வாறு அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு இல்லையென்றால் அடுத்த வருடத்தில் ஆசிரியர் சேவைக்கும் ஆட்சேர்ப்பு இடம்பெறாதா என்பதை நிதி அமைச்சு செயலாளரிடம் கேட்க விரும்புகின்றேன்.

இது மிகவும் பாரதூரமான பிரச்சினை ஆகும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)



# கடன் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் நீண்டகாலமாக எதிர்கொண்டுள்ள நிதி மற்றும் கடன் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக உலக வங்கி பிரதிநிதிகளுக்கு நுண், சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் எடுத்துரைத்தனர். உலகவங்கியின் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நாலக கொட ஹேவா, லக்ஷ்மன் கிரியெல்ல, எரான் விக்கிரமரத்ன, நிரோஷன் பெரேரா மற்றும் ஹர்ன ராஜகருணா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, கொரோனா காலத்தில் தம்மால் தங்கள் தொழிலை சரியாக மேற்கொள்ள முடியவில்லை என்றும், கடந்த அரசாங்கத்தின் திறமையற்ற ஆட்சி நிர்வாகத்தின் காரணமாக நாடு வங்குரோத்தடைந்தமையால் தங்களின் தொழில்கள் நஷ்டத்தை எதிர்நோக்கின என்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்கள் கோரிக்கை விடுத்தனர். மேலும், இதன் காரணமாகக் கடனை செலுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், கடனைச் செலுத்துவதற்கு சாதகமான வேலைத்திட்டம் ஒன்றை வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

தற்போதைய அரசாங்கம் மனிதாபிமானமற்ற முறையில் பரேட் சட்டத்தை அமுல்படுத்துவதால் தாம் உட்பட நாடளாவிய ரீதியில் பரந்துகிடக்கும் நுண், சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் மற்றும் தொழில்முனைவோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (05)

# யாழ்ப்பாணத்தில் வீட்டொன்றில் இருந்து தினமும் வீதிக்கு வெளியேற்றப்படும் நீரால் மக்கள் பாதிப்பு

யாழில் வீடொன்றில் இருந்து தினமும் வீதிக்கு நீர் வெளியேற்றப்படுவதாக குறித்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.



யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள கோவில் வீதியில் காணப்படும் வீடொன்றில் இருந்தே இவ்வாறு நீர் வெளியேற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெளியேற்றப்படும் நீரானது வீதியோரமாகத் தேங்கிக் காணப்படுவதால் அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல தடவைகள் மாநகர சபையினருக்கு அறிவித்த நிலையிலும், மாநகர சபை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# கொழும்பு –கணபதி இந்து மகளிர் பரிசளிப்பு நிகழ்வு சிறப்புற்றது









கொழும்பு -12 இல் உள்ள 'கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலயத்தின்' 2022 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் திருமதி ஏ.சாந்தினி சர்மாவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு வலயக் கல்வி பணிப்பாளர் வி.ஆர்.தேவபந்துவும், சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்வி பணிப்பாளர் மு.ரஞ்சித்பிரேமதிலக்க மற்றும் ஸ்ரீகிருஷ்ணா கோப்பரேன் நிறுவனத்தினரும் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் இந்நிகழ்வில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மூடிமறைத்து சமாளிப்பது தீர்வல்ல

வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி வவுனியாவில் செய்தியாளர்களைச் சந்தித்து ஒரு கோரிக்கையை விடுத்திருக்கிறார். வவுனியா வைத்தியசாலையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பானதாக அவரது கோரிக்கை அமைந்திருந்தது. அதனை நேரடியாகச் சுட்டிக்காட்டாதபோதும் மருத்துவரின் கோரிக்கை அதனை உள்ளர்த்தப்படுத்தித்தான் அமைந்திருந்தது என்பதை ஊகித்தறிவது ஒன்றும் கடினமானதாக இருக்கவில்லை.

அரச பணியாளர்களான தம்பதியருக்கு அண்மையில் வவுனியா வைத்தியசாலையில் குழந்தை பிறந்தது. அங்கிருந்த சிங்களத் தாதி ஒருவருடன் அந்தத் தம்பதியருக்கு கருத்து முரண்பாடு ஏற்பட்டிருந்தது. குழந்தை பிறந்த பின்னர் அதனைக் கவனிப்பதற்கும் அதற்குரிய சிகிச்சையை வழங்குவதற்கும் மனிதாபினமானமற்ற வகையில் அந்தத் தாதியர் மறுத்திருந்தார் என்பது தம்பதியரின் குற்றச்சாட்டு.

இந்த முரண்பாடு முற்றிய நிலையில் "உங்கள் குழந்தைக்கு சிகிச்சை வழங்க முடியாது" என்று அந்தத் தாதியரால் தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது பற்றி வைத்தியசாலையின் விடுதிப் பொறுப்பு மருத்துவர்கள், நிபுணர்கள் மற்றும் நிரிவாகத்தினரிடம் முறையிடப்பட்டபோதும், பழிவாங்கும் நடவடிக்கை தீவிரம் பெற்றதே தவிர தீர்வு கிடைக்கவில்லை என்று தம்பதியர் கூறினர்.

இதனை அடுத்து அங்கு தொடர்ந்தும் சிகிச்சை பெற விரும்பவில்லை என்று எழுதிக் கொடுத்துவிட்டு வைத்தியசாலையை விட்டு வெளியேற தம்பதியர் முயன்றபோது அதற்கும் அனுமதிக்காமல், பிறந்த பச்சிளம் குழந்தைக்கு வழங்கவேண்டிய மருந்துகளை உரியமுறையில் வழங்காமல் இழுத்தடித்தார்கள் என்பது தம்பதியிரின் குற்றச்சாட்டு.

தாதியின் செயலால் கடும் மன உளைச்சலுக்கும் கோபத்துக்கும் ஆளான குழந்தையின் அப்பா அது குறித்து தனது முகநூல் பக்கத்தில் விரிவாகப் பதிவிட்டிருந்தார். இது சர்ச்சையாகியது. ஆளுநர் வரை சென்று விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டது.

இந்தச் சம்பவத்தையொட்டியே பணிப்பாளர் கருத்துத் தெரிவித்திருந்தார். அவரது செய்தியாளர் சந்திப்பின் சாராம்சம் என்னவெனில், தற்போதைய நெருக்கடியான நிலையில் வடக்கு மாகாணத்திலிருந்தும் 50க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் வெளியேறி வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். தாதியர்களின் நிலையும் அதுவே. வெளிநாடுகளில் தாதியர்களுக்கான தேவை அதிகம் இருப்பதால் அவர்கள் இன்னும் வெளியேறக்கூடிய நிலையும் அதிகம். கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா காரணமாக தாதியப் பயிற்சிக் கல்லூரிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை. இதனால் அடுத்து வரும் ஆண்டுகளில் புதிதாகத் தாதியர் எவரும் வெளிவரப்போவதில்லை. இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் தாதியர்களும் வெளியேறிவிட்டால், அதனால் பாதிக்கப்படப்போவது நீங்கள்தான், அதாவது வவுனியா மக்கள்தான்.

அதனால், ஏதாவது பிரச்சினை என்றால் அதனை ஊதிப் பெருப்பிக்காமல் உரியவர்களிடம் தெரியப்படுத்தி அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கப்பாருங்கள். இது உங்கள் வைத்தியசாலை இங்கே நீங்கள் ஏற்படுத்தும் எதிர்மறைத் தாக்கம் தாதியர் மற்றும் மருத்துவர் வெளியேற்றங்களுக்கு வித்திட்டு உங்களையே மீண்டும் தாக்கும் என்கிற வகையில் அமைந்திருந்தது.

அதாவது மனிதாபிமானம் அற்று அந்தத் தாதி நடந்துகொண்டதான குற்றச்சாட்டைப் பெரிதுபடுத்தாதீர்கள், அப்படிச் செய்தால் அவர் வேலையை விட்டுவிட்டுச் சென்றுவிடுவார், பின்னர் உங்களைக் கவனிக்க தாதி இருக்கமாட்டார் என்பதே அவரது கருத்தின் சுருக்கம்.

இது முற்றிலும் தவறான ஒரு வாதம். அந்தத் தாதி மீதான குற்றச்சாட்டு உண்மையெனில், அவரது தனது தாதிய நெறிமுறைகளையும் அறத்தையும் அடியோடு மீறியிருக்கிறார். அது குறித்து அதிகாரிகளிடம் முறையிட்டும் அவர்களால் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கமுடியவில்லை. ஒரு பச்சிளம் குழந்தையை தனது அணுகுமுறையால் அவர் உயிராபத்துக்கு உள்ளாக்கியிருக்கிறார் எனில் அவர் தனது கடமை மற்றும் அறத்திலிருந்து முற்றிலுமாகத் தவறியிருக்கிறார் என்பதே பொருள். அப்படிப்பட்டவர் அந்தக் கடமையில் இருப்பதிலும் பார்க்க இல்லாமலே இருக்கலாம்.

கருத்து முரண்பாடு குறித்து நோயாளர்கள் அல்லது அவர்களது உறவினர்கள் எப்படி அதற்கெதிராக நிர்வாகத்திடம் முறையிட்டு நடந்துகொள்ளவேண்டுமோ அதுபோன்றே தாதியும் அந்த நோயாளர் குறித்து நிர்வாகத்திடம் முறையிட்டு நடவடிக்கை எடுப்பதுதானே நியாயம். அதைவிடுத்து மருத்துவம் பார்க்க மாட்டேன் என்று சொல்வதும், அந்தக் காரணத்தால் வைத்தியசாலையைவிட்டு நோயாளர்கள் செல்கிறோம் என்று தெரிவிப்பதை நிர்வாகம் ஏற்றுக்கொண்டு நடப்பதும் மருத்துவத்துறைக்கே அவமானம் அல்லவா. அதை எப்படி ஏற்றுக்கொள்வது. அதை எப்படி நியாயப்படுத்துவது, அதை எப்படி மூடிமறைத்து சமாளித்துச் செல்வது?

பணிப்பாளர் சொல்வதைப்போன்று இதுபோன்ற விடயங்களை மூடிமறைத்து சமாளித்துச் சென்றால் இனியும் இனியும் இதுதான் நடக்கும். அதனால் இதற்கெதிராக உறுதியான, தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம். தாதியர்களில் பலரின் நடத்தை இங்கு மட்டுமல்ல பொதுவாகவே அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களின் கடும் விசனத்துக்குள்ளாகும் விதத்தில் அமைந்திருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. அந்தப் போக்கில் மாற்றம் ஏற்படவேண்டும் எனில் இந்த விடயத்தில் முறையான, விரிவான விசாரணை நடத்தப்பட்டு அந்தத் தாதி குற்றமிழைத்திருந்தால் அவர் உடனடியாக இடைநிறுத்தப்படவேண்டும். குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர் தாதியாக இருப்பதற்கே அருகதையற்றவராக்கப்படவேண்டும். அதைவிடுத்து மூடிமறைத்து சமாளிப்பது இதற்குரிய தீர்வல்ல என்பதைப் பணிப்பாளர் புரிந்துகொண்டு செயலாற்றுவது முக்கியம்.

## அமைச்சர் ஹெகலியவுக்கு எதிராக 10 லட்சம் ஒப்பங்கள் திரட்டல்

### அதுவே இலக்கு என்கிறார் காவிந்து எம்.பி.

நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு முன்பாக, சுகாதாரத் துறை அமைச்சர் ஹெகலியவுக்கு எதிராக 10 இலட்சம் கையொப்பங்களைப் பெறுவதற்கான பணிகளை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுத்துள்ளதாக அக்கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்து ஜயவர்த்தன தெரிவித்தார்.

அவருடைய தலைமையில் நேற்று கையொப்பம் திரட்டும் நிகழ்வு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தரம் குறைந்த மருந்துகளால் நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதால் சுகாதார அமைச்சு பொறுப்புடன் செயற்படவேண்டும்.

சுகாதாரக் கட்டமைப்பு மோசமடைய சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவே காரணமாக இருப்பதால் அவருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்துள்ளது -என்றார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை தொகுதி அமைப்பாளர் அஜித்.பி பெரேராவின் ஏற்பாட்டில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான கையொப்பம் திரட்டும் நிகழ்வு களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.



முறையான சுகாதார சேவையை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும், சுகாதார சேவையிலிருந்தும் சுகாதார அமைச்சர் இராஜினாமா செய்யவேண்டும் வலியுறுத்தி இந்த கையெழுத்து திரட்டும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.


## இறைமைக்குப் பாதிப்பு ஏற்பட்டால் ஜனாதிபதி ரணிலை எதிர்ப்போம்

### நாமல் அறிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்வின் செயற்பாடுகளால் இறைமைக்கு பாதிப்பு ஏற்படும்போது அதற்கெதிராக குரல்கொடுப்பதற்கு நாம் இரண்டு தடவைகள் சிந்திக்கப்போவதில்லை என்று பொது ஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜனபெரமுனவின் மத்திய கொழும்பு தொகுதி மக்கள் சந்திப்பு நேற்றைதினம் நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



பொதுஜனபெரமுனவுக்கு மக்கள் அளித்த ஆணைக்கு அமைவாகவே நாம் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி ஆசனத்தில் அமர வைத்திருக்கின்றோம்.

அந்த வகையில், அவருடைய செயற்பாடுகள் பொருளாதார அபிவிருத்தியை மையப்படுத்தியதாகவும் எமது கொள்கைகளுக்கு அமைவாகவும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டு இறைமைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் வகையில் அவருடைய செயற்பாடுகள் அமைந்தால் அதற்கு எதிராக குரல் எழுப்புவதற்கும் செயற்படுவதற்கும் இரண்டு தடவைகள் சிந்திக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை - என்றார்.

## மலவாசலில் மறைத்து தங்க ஜெல் கரைசலை கொண்டுசென்ற ஓட்டோச் சாரதி கைதானார்



இந்தியாவின் மும்பைக்கு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த ஓட்டோ சாரதி ஒருவர் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுமார் 2 கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான தங்கஜெல்கரைசல் அடங்கிய 03 கெப்ஸியூல்களை கடத்திச் செல்லும்போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் கொழும்பு வாழைத்தோட்டத்தைச் சேர்ந்த 29 வயதான ஓட்டோ சாரதியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை மாலை 04.05 மணியளவில் இந்தியாவின் மும்பைக்கு செல்லவிருந்த விமானத்தில் செல்வதற்கு குறித்த நபர் அங்கு வந்திருந்தபோது, அவர் மீதான சந்தேகத்தின் அடிப்படையில், சோதனைகளை மேற்கொண்டபோது அவரது மலவாசலில் ஒரு கிலோ 280 கிராம் நிறையுள்ள தங்க ஜெல் கரைசல் அடங்கிய 3 கெப்ஸியூல்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த தங்க ஜெல் கரைசலை தங்கமாக மாற்றும் தொழில்நுட்பம் தற்போது இந்தியாவில் மட்டுமே உள்ளதாக சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். தங்க ஜெல் கரைசல் அடங்கிய கெப்ஸியூல்கள் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்கவிமானநிலைய சுங்க வளாகத்தில் உள்ள இரத்தினக்கல் மற்றும் ஆபரண அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கைதுசெய்யப்பட்ட நபர் நேற்று (சனிக்கிழமை) நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

## கரப்பிட்டிய வைத்தியசாலையில் இருதய சிகிச்சை பிரிவு முடக்கம்

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிறுவர் இருதய சிகிச்சை பிரிவின் பல சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் நிர்வாகக் குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வைத்தியசாலை வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கராப்பிட்டிய வைத்தியசாலையில் இருதய பிரிவின் விசேட வைத்திய நிபுணர் தொழிலுக்காக வெளிநாடு சென்றமையால் சிறுவர்களுக்கான இருதய அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுவர்




இருதய அறுவை சிகிச்சையை அவர் மாத்திரமே மேற்கொண்டார். அவருடைய வெற்றிடத்தினை பூர்த்தி செய்வது அவ்வளவு இலகுவாகாது என்றுள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 200/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# 13 ஆவது திருத்தத்தை வைத்து கால் பந்தடிக்காது எதிர்க்கட்சிகள் இணைந்து தீர்வுக்கு வரவேண்டும்

## ஐக்கிய தேசிய கட்சி அழைப்பு



அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்தை வைத்துக் கொண்டு எதிர்க்கட்சிகள் கால்பந்து அடிக்காமல் நாடாளுமன்றத்தில் விவாதித்து மக்களுக்கு தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும்.

ஏனெனில் 13 ஆம் திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு மாத்திரமே தீர்மானிக்க முடியும் என ஜனாதிபதியின் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான பிரதானியும் ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் தொடர்பாக அனைத்து கட்சிகளும் கலந்துரையாடி அதனை செயற்படுத்தவேண்டும்என்ற நோக்கிலேயே 13 தொடர்பான தனதுபிரேரணையைஜனாதிபதி கடந்த வாரம் நாடாளுமன்றத்துக்கு முன்வைத்திருந்தார்.

நாடாளுமன்றத்தால் மாத்திரமே இதற்குத் தீர்வு காண முடியும். ஆனால் எதிர்க்கட்சிகள் இதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டு13 ஆம் திருத்தத்தை வைத்துக்கொண்டு கால் பந்தாடி வருகின்றன.

13 ஆம் திருத்தம் தொடர்பாக எதிர்க்கட்சிகளிடம் உறுதியான நிலைப்பாடு இல்லை. ஒரு தரப்பு ஆதரவளிக்கும்போது மற்ற தரப்பு அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறது.

எதிர்க்கட்சிகளின் இந்த நிலைப்பாடு 13 ஆம் திருத்தத்தில் மாத்திரமல்ல, அரசாங்கம் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவந்திருக்கும் அனைத்து பிரேரணைகளிலும் அவ்வாறே இருக்கின்றது.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் விடயத்திலும் எதிர்க்கட்சிகள் ஒரு நிலைப்பாட்டில் இல்லை. இவ்வாறான எதிர்க்கட்சி எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தால் நாட்டுக்கு என்ன நடக்கும் எனத் தெரியாது.

மேலும், 13 ஆம் திருத்தத்தை பாரியதொரு விடயமாக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து, நாட்டில் மீண்டும் இனங்களுக்கிடையில் மோதலொன்றை ஏற்படுத்தவே எதிர்க்கட்சி முயற்சிக்கிறது.

நாடுதொடர்பில்உணர்வு இருக்கும்உண்மையானஎதிர்க்கட்சிஎன்றால்,13தொடர்பாக ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு முன்வைத்திருக்கும்பிரேரணைசம்பந்தமாகநாடாளுமன்றத்தில்விவாதித்து,மக்களுக்குதீர்வொன்றை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். மேலும், அரசாங்கம் வடக்கில் கைப்பற்றிய காணிகளில் ஒரு தொகையை அந்த மக்களுக்குமீண்டும்கையளிக்க முற்படும் போது சிலர் எதிர்ப்பு தெரி விக்கின்றனர். ஆனால்முன்னாள்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரது காலத்தில் சுமார் 12ஆயிரம் ஏக்கர் காணி விடுவித்தார்.

ஆனால், தற்போது நாங்கள் 300 ஏக்கர் காணி விடுவிக்கும்போது, மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் எதிர்ப்புதெரிவிக்காமல்இருந்த தேரர்கள்கூடஇதற்குஎதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இராணுவத்தினர் வடக்கில் கட்டடங்கள் காணிகளை கைப்பற்றி இருந்தனர். யுத்தம் முடிவடைந்த பின்னர் அந்த கட்டடங்கள் காணிகளை மீளக் கையளிக்க நடவடிக்கை எடுத்தனர்.அதுவேதற்போதும் இடம்பெறுகிறது. எனவே, யுத்தம் முடிவடைந்தும் வடக்கு கிழக்கு மக்களுக்கு அவர்களின் உரிமைகளை அனுபவிக்க இன்னும் முடியாமல்போயிருக்கிறது. அவர்கள்தமிழர்கள்என்பதால்அவர்களைநசுக்கவேண்டுமாஎன நாங்கள் சமூகத்தில் கேட்க வேண்டும். - என்றார். (05)

# குருந்தூரில் தொடர்ந்தும் வழிபாடுகள் நடத்தப்படும்

## ரவிகரன் அறிவிப்பு

பொலிஸார் மற்றும் சாந்தபோதி தேரர் ஆகியோருடைய குழப்ப முயற்சிகளைக் கடந்து குருந்தூர்மலையில் சிறப்பாக பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தொடர்ந்தும் இந்தப் பொங்கல் வழிபாடுகள் குருந்தூர்மலையில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

குருந்தூர்மலையில் இடம்பெற்ற பொங்கல் வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

குறிப்பாக இந்த பொங்கல் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றாலும் சில குழப்ப முயற்சிகளும் இங்கு முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அந்தவகையில் பொங்கல் வழிபாடுகளுக்குரிய பொங்கல் பொருள்களை ஏற்றிவந்த உழவியந்திரம் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டதோடு குருந்தூர்



மலைப் பகுதிக்குள் அனுமதிக்கப்படாமல் தடுக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் உடனடியாக நாம் பொலீஸார்வழிமறித்த இடத்திற்குச்சென்று எமது தலையீட்டுடன் அந்த பொங்கல் பொருள்களைஎடுத்துவந்துஇங்கேபொங்கல் வழிபாடுகளை மேற் கொண்டோம். அவ்வாறு பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தபோது சுற்றியிருந்த பொலிஸாரின் பாதுகாப்புக்களையும் மீறி எமது வழிபாட்டுப்பகுதிக்குள்நுழைந்தகல்கமுவ சாந்தபோதி தேரர் எமது வழிபாடுகளைக் குழப்ப முயன்றார். எனினும் எமது மக்கள் அவரை அங்கிருந்து வெளியேறமோறு கோசமிட்டனர்.

அதனைத் தொடர்ந்து பொலிஸாருடைய தலையீட்டுடன் அவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

அதனைத் தொடர்ந்து நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாகவும், தொல்லியல் திணைக்களத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு மிகச் சிறப்பாக இந்த பொங்கல் வழிபாடு மேற்கொள்ளப்பட்டது.

இந்த பொங்கல் வழிபாடுகள் இனியும் தொடர்ந்து குருந்தூர்மலையில் இடம்பெறும். அதற்குரிய தினங்களை நாம் தொடர்ந்து அறிவிப்போம், அந்த தினங்களில் இங்கு பொங்கல் வழிபாடுகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம். - என்றார். (05)





OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாதிபதித் தேர்தலில் பலர் ஐ.தே.கவுடன் இணைவராம்

ஜனாதிபதித் தேர்தலின்போது, ஐக்கிய தேசியக் கட்சியுடன் பலர் இணைந்துக் கொள்வார்கள் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர், எதிர்க்கட்சித் தலைவருக்கு கோட்டாவின் வீழ்ச்சிக்கு காரணமான தரப்பினருடன்தான் எதிர்க்காலத்தில் பயணிக்க நேரிடும் எனவும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசியக்கட்சியில் எதிர்க்காலத்தில் பலர் இணைந்து கொள்ளவுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலின்போது பலர் இணைந்து கொள்வார்கள்.

ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஜே.வி.பியினருடனோ நாலக கொடஹோவுடனோ ஜீ.எல். பீரிஸுடனோ கூட்டணி அமைத்துக் கொள்ள முடியும்.

கோட்டாபயராஜபக்ஷவை வீழ்த்திய தரப்பினருடன், இணைந்துதான் எதிர்க்காலத்தில் சஜித் பிரேமதாஸவால் பயணிக்க நேரிடும்.

மக்கள் வீழ்ந்து இருக்கும்போது, தன்னால் அதற்கான சவாலை பொறுப்பேற்ற முடியாது என்பதை சஜித் பிரேமதாஸ முழுநாட்டுக்கும் நிரூபித்துவிட்டார்.

அவர் நாட்டு மக்களுக்கானவர் அல்லர். அந்த சவாலை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த ஒருவருட காலமாக நாட்டை முன்னேற்றியுள்ளார்.

அடுத்த வருடத்தில் இதனைவிட முன்னேற்றகரமான பாதையில் நாம் பயணிப்போம். நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரக்கூட அவர்கள் அஞ்சுகிறார்கள். நாம் எதற்கும் தயாராகவே உள்ளோம். நாம் கட்சி அரசியலுக்கு அப்பாற் சென்று, நாட்டை முன்னேற்றுகின்றமை தொடர்பாகவே தற்போது செயற்பட்டுவருகிறோம். -என அவர் மேலும் தெரிவித்தார். (05)



## வியட்நாம் மற்றும் இலங்கை இடையிலான பொருளாதார உறவை பலப்படுத்த முடிவு

வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையிலான பொருளாதார உறவுகளை பலப்படுத்துவது தொடர்பாக இருநாட்டின் பிரதமர்களுக்கிடையே விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

வியட்நாம் மற்றம் இலங்கைக்கு இடையிலான பொருளாதாரம் மற்றும் விமான சேவைகளை அதிகரிப்பது தொடர்பாக பிரதமர் தினேஸ் குணவர்தனவுக்கும் வியட்நாம் பிரதி பிரதமர் லூ குவாங்க்கு இடையில் நடைபெற்ற பேச்சில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான இலங்கையின் உயர்மட்ட குழு சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள குன்மிங்கில் நடைபெற்றுவரும் 7 ஆவது சீனா-தெற்காசிய எக்ஸ்போ கண்காட்சியில் பங்குபற்ற சென்றுள்ளனர்.

இந்த விஜயத்தில் பிரதமர் தினேஸ் குணவர்த்தன, சீனாவின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.

மேலும், வெளிநாட்டுத் தலைவர்களுடனான சந்திப்பின் ஓர் அங்கமாக வியட்நாம் பிரதி பிரதமரையும் இவர் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் இருதரப்பு பொருளாதார, கலாசார மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பொது மற்றும் தனியார் துறைகளில் தற்போதுள்ள கூட்டு முயற்சிகளுக்கு மேலதிகமாக புதிய வர்த்தகம் மற்றும் முதலீடுகளின் சாத்தியக்கூறுகளை இலங்கை ஆராய வேண்டும் என வியட்நாம் பிரிதி பிரதமர் கோரிக்கை விடுத்தார்.

அத்தோடு, வியட்நாம் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதுடன், தொழில்வல்லுநர்கள் மற்றும் திறமையான இலங்கைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் எனவும் அவர் உறுதியளித்தார்.

விவசாயத்தில் ஏற்றுமதி ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து வியட்நாம் பிரதிப் பிரதமருடன் பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்துரையாடியதுடன், இறப்பர், தேங்காய், தேயிலை, மீன்பிடி, எரிசக்தி மற்றும் சுரங்கப் பணிகள் குறித்தும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் ஊடாக சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க முடியும் எனக் கூறிய பிரதமர், பௌத்த மத வழிபாட்டுத் தலங்களுக்கு சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு வியட்நாம் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். (05)

## இனத்தை ஒருங்கிணைக்கும் தளமே சனசமூக நிலையம்

### முன்னாள் தவிசாளர் நிரோஷ் கூறுகிறார்

கிராமங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் புலம்பெயர்ந்தவர்களும் தாயகத்தில் வாழ்பவர்களும் ஒன்றிணைந்து பயணிப்பது இனத்தின் நலன்களை மையப்படுத்திய உத்தியாகும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அச்சுவேலி மத்திய சனசமூக நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துரைக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

எமது மண்ணில் நல்ல பல மாற்றங்களுக்கு அடிப்படையாக கிராம அமைப்பை வலுப்படுத்தவேண்டிய தேவையுள்ளது.

எமது கிராம கட்டுமானங்களின் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக நிலத்திலும் புலத்திலும் வாழும் உறவுகள் கைகோர்த்து கிராமம் என்ற வகையில் அபிவிருத்திகளை முன்னெடுப்பது அவசியமாகவுள்ளது.

ஒரு கிராமத்தின் ஒருங்கிணைவு சனசமூக நிலையங்களிலேயே தங்கியுள்ளது. சனசமூக நிலையத்தின் ஒருங்கிணைவு இனத்தின் ஒருங்கிணைவாக அமைகின்றது.

போரின் தாக்கம் காரணமாக எம்மில் லட்சக்கணக்கானோர் புலம்பெயர்ந்துவிட்டனர். இது உள்நாட்டில் எமது ஜனநாயக பலத்தைப் பாதித்துள்ளது.

இந்நிலையில் மேலுமொரு கோணத்தில் புலர்பெயர்ந்தோரின் வளத்தை எவ்வாறாக எமது அரசியல் பொருளாதார, கலாசார, சமூக இருப்பிற்காக தகவமைக்க முடியும் என்பதை இனம் சார்ந்த அக்கறையுடன் சிந்தித்து செயற்படுத்த வேண்டும்.

அவ்வாறான அறிவார்த்தமான முயற்சிகளில் ஒன்றே இன்று இந்த அச்சுவேலி மண்ணில் நிறைவேறியுள்ளது.

ஒரு சனசமூக நிலையம் கிராமத்தின் கட்டமைப்பை தகவமைக்கும் நிலையம் என்ற அடிப்படையில் கல்வி, பொருளாதாரம் என சகல அம்சங்களிலும் முன்னிலையில் உள்ள இந்தக் கிராமத்தில் தொடந்து மேம்பாட்டை தக்க வைப்பதற்கு இந் நிலையம் அடிப்படையாக அமையும்.

பொதுவாக புத்திஜீவிகள் பொதுப்பணிக்கு வருவதில்லை என்பது பரவலான குற்றச்சாட்டு. இச் சூழ்நிலையில் இங்கு எழுத்தாளரும் சமூக செயற்பாட்டாளருமான அருண் செல்லப்பா போசகராக சனசமூக நிலையத்தை நிலத்திலும் புலத்திலுமாக ஒருங்கிணைக்கின்றார்.

அதுபோன்று ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் தலைமை தாங்குகின்றார்.

செயலாளராக நடேசு இரவீந்திரன், பொருளாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிவகுமார் பிரதீபா என ஒரு கல்விப்புலம் பொதுப்பணி களத்தில் நிற்கின்றமை மகிழ்ச்சிக்குரியது.

இந் நிலையத்தின் ஏனைய செயற்பாட்டாளர்களும் பல்துறைசார்ந்தவர்களாக இருக்கின்றனர். கல்வியியலாளர்கள் சமூக செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கும் துர்ப்பாக்கிய நிலையில் இவ்விடயம் ஏனைய படித்தவர்களுக்கு முன்னுதாரணமாக அமையவேண்டும் என இங்கு கோடிட்டுக்காட்டுகின்றேன் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். (05)



## ஐ.தே.கட்சியின் சம்மேளனம் ஜனாதிபதி ரணில் தலைமையில்

### செயற்குழுவில் தீர்மானம்

ஐக்கிய தேசிய கட்சி சம்மேளனத்தை கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நடத்த கட்சியின் செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் ஐக்கிய தேசிய கட்சிக்குள் அனைவரையும் இணைத்துக்கொள்ளும் வகையில் கட்சியின் யாப்பில் திருத்தம் மேற்கொள்ள இருக்கிறோம் என கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கட்சியின் தலைமையமான சிறிகொத்தவில் இடம்பெற்றது. இதன்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசிய கட்சியின் கட்சி சம்மேளனத்தை நடத்துவதற்கான கட்சியின் செயற்குழுவின் அனுமதியை பெற்றுக்கொள்ளவும் சம்மேளனத்தின்போது கட்சி யாப்பில் மேற்கொள்ள இருக்கும் திருத்தங்கள் தொடர்பில் செயற்குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தவும் கட்சியின் செயற்குழு 17 ஆம் திகதி மாலை கூடியது.

அதன்பிரகாரம் கட்சியின் 56 ஆவது வருடாந்த மகா சம்மேளனத்தை செப்ரெம்பர் 10 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு லேக்ஹவுஸுக்கு எதிரே அமைந்திருக்கும் கேட்போர் கூடத்தில் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கட்சி யாப்பு திருத்தத்தின் போது, கட்சியை விட்டு சென்றவர்கள் மீண்டும் கட்சிக்குள் வந்து செயற்பட முடியுமான வகையிலும் தேர்தல் காலத்தில் வேறு கட்சிகளை கூட்டிணைத்துக்கொண்டு போட்டியிட முடியுமான வகையிலும் மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

போராட்டத்தின் போது மக்கள் மாற்றத்தை வேண்டி இருந்தார்கள். அந்த மாற்றத்தை புதிய வடிவத்தில், புதிய வேலைத் திட்டத்துடன் முன்னெடுக்கவே ஐக்கிய தேசிய தற்போது முயற்சிக்கிறது. அதற்கான ஆரம்பமே கட்சி சம்மேளனத்தின் மூலம் முன்னெடுக்க இருக்கிறோம். -என்றார். (05)

## வீதி அபிவிருத்தி அதிகார சபையை தனியார் மயப்படுத்தப் போவதில்லை

### நெடுஞ்சாலை அமைச்சர் பந்துல திட்டவட்டம்



வீதி அபிவிருத்தி அதிகார சபையை தனியார் மயப்படுத்த போவதில்லை. நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதால் அரச சேவையாளர்களின் தொழில் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாது.

மனித வள முகாமைத்துவம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு தனியார் மயப்படுத்தும் முயற்சிகள் முன்னெடுப்பாக தொழிற்சங்கத்தினர் அமைச்சரிடம் குறிப்பிட்டனர்.

அமைச்சரவையின் அனுமதியுடன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை நிதியமைச்சின் கீழ் உள்ள நிறுவனத்துக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

அரச சொத்து மதிப்பீட்டை அதிகரித்துக் கொள்வதற்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இதனை தனியார் மயப்படுத்தல் என்று குறிப்பிட முடியாது. என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நட்டமடையும் அரச நிறுவனங்களைமறுசீரமைக்காமல் பொருளாதாராப் பாதிப்புக்கு நிலையான தீர்வு காண முடியாது. ஆகவே நட்டமடையும் அரசநிறுவனங்களை மறுசீரமைக்க கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒருசில நிறுவனங்களின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தாமல் மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்க முடியாத தன்மை காணப்படுகிறது.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதால் அரச சேவையாளர்களின் தொழில் உரிமைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

மறுசீரமைப்புக்களின் போது மனித வள முகாமைத்துவத்தை பாதுகாக்க சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே மறுசீரமைப்பு பணிகள் வினைத்திறனான முறையில் வெளிப்படையாக முன்னெடுக்கப்படுகிறது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (05)

# பண்பாட்டுப் பெரு விழா









வேலணை பிரதேச செயலகத்தின் பண்பாட்டு பெருவிழா வெள்ளிக்கிழமை வேலணை மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

வேலணை பிரதேச செயலாளர் கைலாயபிள்ளை சிவகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலாளர் அம்பலவாணர்சிவபாதசுந்தரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார்.

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகமும், வேலணை பிரதேச செயலகம் மற்றும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்திய இந்நிகழ்வில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 13 கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டிருந்ததோடு அவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# அமெ. – இலங்கை ஒத்துழைப்புடன் நிறைவடைந்த இந்தோ – பசுபிக் சுற்றுச் சூழல் பாதுகாப்பு மன்றம்





அமெரிக்காவின் இந்தோ - பசுபிக் கட்டளையின் அனுசரணையுடன் இலங்கை கடற்படையால் ஒகஸ்ட் 14ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட 12 ஆவது வருடாந்த இந்தோ - பசுபிக் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றம் ஆசிய-பசுபிக் பிராந்தியம் முழுவதுமுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக பணியாற்றும் தரப்பினரை ஒன்றிணைத்தது.

28 நாடுகளின் பங்கேற்புடன் இலங்கையால் நடத்தப்பட்ட இந்த முதலாவது ஐ.பி.ஈ.எஸ்.எவ். மன்றம் 'ஒத்துழைப்பின் ஊடாக சுற்றுச்சூழல் மீள்தன்மை' எனும் தொனிப்பொருளின் கீழ் கூட்டு ஒத்துழைப்பின் மூலமாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தியது.

இந்த நிகழ்வு காலநிலை பாதுகாப்பு, வளங்களின் நிலைபேறான தன்மை, பலதரப்பு ஒத்துழைப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாற்றும் ஆகிய விடயங்களில் கவனம் செலுத்தும் அதேவேளை, பாதிப்புகளிலிருந்து மீண்டெழும் தன்மையுடைய சமூகங்களைப் பேணி வளர்த்தல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஒரு பாதுகாப்பான இந்தோ - பசுபிக் பிராந்தியத்தின் அடித்தளத்தை வலுப்படுத்துதல் ஆகிய விடயங்களில் அமெரிக்காவும் இலங்கையும் கொண்டுள்ள உறுதிப்பாட்டையும் எடுத்துக் காட்டுகிறது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆரம்ப உரையாற்றுகையில்-

பெரிய, சிறிய அனைத்து நாடுகளும் வெற்றி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான வாய்ப்புகளைக்கொண்டிருக்க வேண்டும் என்பதே உலகம் தொடர்பான எமது தொலைநோக்காகும்.

நீங்கள் ஃபிஜியில் அல்லது ஆஸ்திரேலியாவில் அல்லது மங்கோலியாவில் அல்லது இலங்கையில் என எங்கு இருந்தாலும், நாம் அனைவரும் பாதிக்கப்படக்கூடியவர்களே.

இந்த ஆண்டு உலகெங்கிலும் உள்ள நாடுகளைத் தாக்கும் தீவிரமான காலநிலை உச்சநிலைகளை நாம் காண்கிறோம். நாம் அனைவரும் அதன் பாதிப்புகளை உணர்கிறோம்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலை உணவுப் பாதுகாப்பைப் பாதித்துள்ளது.

இவ்வாறான பொது-வான சவால்களை எதிர்கொள்வதற்கான சிந்தனைகளை பகிர்ந்துகொள்வதற்காகவும் புதுமையான வழிகளை கண்டறிவதற்காகவும் நாம் அனைவரும் ஒன்றிணைவது இன்றியமையாததாகும் எனக் குறிப்பிட்டார்.

மேலும், இது தொடர்பாக இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவிக்கையில் -

தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக நாம் எவ்வாறான முன்னேற்றங்களை அடைந்தாலும், சாதித்தாலும், இயற்கை எப்பொழுதும் அதன் தனித்துவமான ஆச்சரியங்களுடன் அவை-யனைத்தையும் விஞ்சி நிற்கிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

ஆகையால், மனிதன் இன்னும் அதிக விழிப்புடன் இருத்தல் அவசியமாகும். எனவே, அறிவாற்றல் உடையவர்கள் என்ற வகையில் நாம் நமது நாகரிகம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டையும் ஒரே மாதிரியாகப் பேணிப் பாதுகாப்பதை உறுதிசெய்யக்கூடிய ஓர் உறவை உருவாக்கக்கூடிய வகையில் பகுத்தறிவுடன் நடந்துகொள்வதைத் தொடர வேண்டும் எனக் கூறினார்.

நான்கு நாள்களாக நடைபெற்ற இந்த நிகழ்வு முழுவதும் காலநிலை மாற்றம், நிலப் பாதுகாப்பு, கடல் மற்றும் நீர் பாதுகாப்பு, நகரமயமாக்கலின் பாதுகாப்பு மற்றும் விளைவுகள் போன்ற விடயப்பரப்புகளில் அறிவைப் பகிர்வதற்கும் சிறந்த நடை முறைகளைப் பரப்புவதற்குமான சூழலை மேம்படுத்தக்கூடியவாறு முன்வைப்புகள், குழுநிலை கருத்தாடல்கள் மற்றும் கலந்துரையாடும் குழு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டனர்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான ஒரு முழுமையான அணுகுமுறையை தழுவியதன் மூலம் தீவிரமான சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்கு செயற்படுத்தக்கூடிய திட்டங்களை உருவாக்குவதற்கு ஐ.பி.ஈ.எஸ்.எவ் வசதிசெய்தது.

பிராந்தியம் முழுவதும் சுற்றுச்சூழல் மீள்தன்மை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான உத்திகளை உருவாக்குவதில் செயற்றிட்ட அபிவிருத்தி மற்றும் பணிக்குழு அபிவிருத்தி செயலமர்வுகள் முக்கிய பங்காற்றின.

இந்தோ-பசுபிக் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றம் 2010ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

பிராந்திய ஒத்துழைப்பு, அறிவைப் பகிர்தல், தேசிய மற்றும் பிராந்திய பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்காக கூட்டு நடவடிக்கைகளை மேற் கொள்ளல் போன்ற விடயங்களைப் பேணிவளர்ப்பதில் கவனம் செலுத்தும் ஒரு வருடாந்த நிகழ்வாகும்.

இந்தோ-பசுபிக் முழுவ-துமுள்ள பல்வேறு நாடுகளால் இம்மன்றம் நடத்தப்படுகிறது.

சுற்றுச்சூழல் மீள்தன்மை மற்றும் பாதுகாப்புக்காக செயற்படுத்தக்கூடிய திட்டங்களை உருவாக்குவதற்கு நிபுணர்கள், கொள்கை வகுப்பாளர்கள், இராணுவ அதிகாரிகள் மற்றும் ஏனைய தரப்பினரை இம்மன்றம் ஒன்றிணைக்கிறது.

2024 ஆம் ஆண்டுக்கான இந்தோ - பசுபிக் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றம் வனுவாட்டுவில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# 21 லட்சம் ரூபா சிகரெட்டுக்களுடன் விமான நிலையத்தில் ஒருவர் கைது



சட்டவிரோதமாக சிகரெட்டுக்களை நாட்டுக்கு கடத்தி வந்த நபரொருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து இலங்கைக்கு வந்த விமானத்திலேயே கைதுசெய்-யப்பட்ட நபர் வருகை தந்துள்ளார்.

இவரிடமிருந்து மீட்கப்பட்ட சிகரெட்டுக்களின் பெறுமதி சுமார் 21 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த நபர் டுபாயிலுள்ள உணவகம் ஒன்றில் சமையல் காரராக பணியாற்றிய வந்த 38 வயதுடைய நாத்தாண்டிய பிரதேசத்தில் வசிப்பவர் ஆவார்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 21 ஆயிரத்து 400 சிகரெட்டுக்களை குறைத்த நபரின் பயணப் பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அதிகாரிகள் மீட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (05)

# 10 லட்சம் ரூபா பணத்துடன் வீடு திரும்பிய வர்த்தகர் மாயம்

## விசாரணைகள் தீவிரம்

மாத்தறை தெனியாய பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் இருந்து 10 லட்சம் ரூபா பணத்தை பெற்றுக்கொண்டு வான் ஒன்றில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வர்த்தகர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பாக வர்த்தகரின் மனைவி கொலன்ன பொலிஸில் மேற்காண்ட முறைப்பாட்டுக்கு அமைய விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் வர்த்தகர் பயணித்த வான் கொலன்ன பனிங்கந்த பகுதியிலுள்ள பொதுமயானத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வானின் சாரதி ஆசனத்தில் மிளகாய்த்தூள் வீசப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் பணத்தை கொள்ளையடித்துச் செல்வதற்காக சந்தேக நபர்கள் மூலம் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலி-ஸார் சந்தேகிக்கின்றனர்.

எவ்வாறாயினும், குறித்த வர்த்தகர் தொடர்பில் எந்தவித தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை எனவும் தொடர்ச்சியாக தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

தேயிலை கொழுந்து சேகரிக்கும் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் குறித்த வர்த்தகர் கடந்த 16 ஆம் திகதி காணாமல் போயுள்ளார்.

அவர் தெனியாய பகுதியில் உள்ள வங்கிக்கு சென்று பணத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அணில்கந்த பிரதேசத்தில் வைத்து காணாமல் போயுள்ளார். அவர் பயணித்த வான் பனிங்கந்த பகுதியில் மீட்கப்பட்டுள்ளதுடன், குறித்த நபர் தொடர்பில் இதுவரையில் எந்த ஒரு தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை.

இந்த சம்பவம் தொடர்பில் கொலன்ன பொலிஸார் மற்றும் எம்பிலிப்பிட்டிய குற்றத்தடுப்பு பிரிவினர் இணைந்து தொடர்ச்சியாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். - என்றார். (05)

# கிழக்கில் வாழும் சமூகங்களின் அடையாளங்களை பிரதிபலிப்பதாக மாகாணக் கொடியை அமைக்குக

## கிழக்கு ஆளுநருக்கு ஹரீஸ் எம்.பி. வேண்டுகோள்





கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் கலாசார விடயங்களை உள்ளடக்கியதாக கிழக்கு மாகாண சபையின் கொடி சீர்செய்யக் கோரி முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீ.ல.மு.கா. பிரதித் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் கிழக்கு மாகாண ஆளுநராக பதவியேற்று மாகாணத்தை மேம் படுத்த பல்வேறு பணிகளை முன்னெடுத்து-வரும் பணியின் மற்றுமொரு அங்கமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல இன மக்களதும் அடையாளங்களைப் பிரதிபலிக்கும் வகையில் கிழக்கு மாகாண கொடி திருத்தியமைக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவை முன்வைத்துள்ளார். மேலும், வடக்கு, கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்த ஆளுநர் ஒருதலை பட்சமாக மக்களின் அபிப்பிராயங்களோ, அதிகாரிகளின் ஆலோசனைகளோ பெறாமல் இனவாத சிந்தனையில் இப்போதுள்ள கிழக்கு மாகாணக் கொடியை உருவாக்கியுள்ளார் என்றும் அதில் கிழக்கில் வாழும் சமூகங்களின் அடையாளங்கள் இல்லாதிருப்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நம்புகிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில் வடமாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள வடமாகாண கொடி அந்த மாகாணத்தில் வசிக்கும் சகல இனங்களினதும் அடையாளங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

எனவே சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த ஆளுநர் என்ற அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல சமூகங்களையும் குறிப்பாக மாகாணத்தில் 40 சதவீதமளவில் வாழும் முஸ்லிங் களின் கலாசாரத்தை பிரபலிக்கும் எவ்வித அடையாளமும் இந்த கொடியில் உள்ளடக்கப்படவில்லை மட்டுமின்றி ஆகக்குறைந்தது முஸ்லிங்களை அடையாளப்படுத்தும் வகையில் நிறம் கூடப் பிரதிபலிக்கவில்லை என்பதை கவனத்தில் கொண்டு மட்டுமின்றி இந்த விடயமானது நீண்டகாலமாக முஸ்லிம் சமூகத்தை வேதனைக்கு உட்படுத்தியுள்ளது என்பதையும் மனதில் கொண்டு இந்த கொடி விடயத்தில் கவனம் செலுத்தி சீர்செய்ய உடனடியாக முன்வரவேண்டும் என்று அந்த கடிதத்தில் ஆளுநரை கேட்டுக்கொண்டுள்ளார். (05)

# பெண் வேட வன்முறையாளர்கள் யாழ்ப்பாணத்தில் 9 பேர் கைது

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெண்களின் ஆடைகளை அணிந்தவாறு வீடுகளுக்குள் புகுந்து அட்டூழியத்தில் ஈடுபட்டு வந்த வன்முறைக் கும்பலைச் சேர்ந்த 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நபர்களை கொலை செய்ய எத்தணித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் 9 பேரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம், கோப்பாய் மற்றும் கீரிமலை பிரதேசங்களில் இரவு வேளையில் வீடுகளுக்குள் புகுந்து கும்பல் ஒன்று அங்குள்ளவர்களை அச்சுறுத்தும் வகையில் தாக்குதல்களை நடத்தியும் பெறுமதியான பொருள்களைச் சேதமாக்கியும் அட்டூழியத்தில் ஈடுபட்டு வந்தது.

அண்மையில் கோப்பாய் வன்முறைக் கும்பலைச் சேர்ந்தோர் சல்வார் ஆடையை அணிந்தவாறு தாக்குதலில் ஈடுபட்டமை சிசிரிவி கமெரா பதிவில் வெளிப்பட்டது.

இந்த தாக்குதல்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் 9 பேர் கைதுசெய்-யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 3 மோட்டார் சைக்கிள்கள், 2 வாள்கள், கைக்கோடரி ஒன்றும் மடத்தல் ஒன்றும் தாக்குதல்களுக்கு அணிந்து சென்ற பெண்கள் ஆடைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கல்வியங்காடு பகுதியில் உள்ள வீடு மீதான தாக்குதலுக்கு டென்மார்க்கில் வசிக்கும் விஸ்வநாதன் என்பவரே காரணம் என்றும் அவர் தமக்கு பணம் அனுப்பியதாகவும் முதன்மை சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (05)

# பட்டம் பறக்கவிட வேண்டாம் மின்சார சபை வேண்டுகோள்!

அம்பாந்தோட்டை - புதிய பொல்பிட்டிக்கு இடையிலான உயர் மின்னழுத்த மின் விநியோக மார்க்கம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் பட்டம் பறக்கவிடுவதை தவிர்க்குமாறு இலங்கை மின்சார சபை பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறித்த பகுதிகளில் பட்டம் பறக்கவிடப்படுவதால் மின்கம்பிகளில் பட்டங்கள் சிக்குண்டு விபத்துக்கள் ஏற்படுவது வழமையாக காணப்படுவதாகவும், இதனால் பல இடையூறுகள் ஏற்படுவதாகவும் மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பட்டம் பறக்கவிடுவதை முடிந்தளவு தவிர்க்குமாறும் மின்கம்பிகளை இணைக்கும் நடவடிக்கைகள் குறித்த பகுதியில் இன்னும் ஒரு வாரத்தில் முடிவடையும் எனவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சுகாதார அமைச்சருக்கு எதிராக வெள்ளியன்று கையெழுத்து வேட்டை

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை தொகுதி அமைப்பாளர் அஜித்.பி பெரேராவின் ஏற்பாட்டில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான மக்கள் கையொப்ப சேகரிப்பு வெள்ளிக்கிழமை களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

முறையான சுகாதார சேவையை ஏற்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும், சுகாதார சேவையிலிருந்தும் தற்போதைய சுகாதார அமைச்சர் பதவியிலிருந்தும் இராஜினாமா செய்து பொருத்தமான ஒருவருக்கு சுகாதார அமைச்சர் பதவியை வழங்குமாறு வற்புறுத்தி இந்த வேலைத்திட்டம் நடைமு-றைப்படுத்தப்பட்டுள்ளது.

களுத்துறை போதனா வைத்தியசாலையில் மருந்துகளை பெற்றுக் கொள்வதற்காக வந்த பெருந்தொகையான நோயாளர்கள் மற்றும் பிரதான வீதியில் பயணிக்கும் மக்களும் இந்த கையெழுத்துப் பத்திரத்தில் கையொப்பமிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் அண்மைய தினங்களாக சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள பல நெருக்கடிகள் மற்றும் பிரச்சினைகள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு பதவி விலக வேண்டுமென பலதரப்புக்கள் வலியுறுத்துகின்றன.

இவ்வாறான சுகாதார நெருக்கடிகள் காரணமாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பதவி விலக வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் இவ்வாறு பொதுமக்களிடையே கையொப்பம் பெற்று வருகின்றனர். அதேநேரம், சுகாதாரத் துறை மீது நாட்டு மக்கள் அனைவருக்கும் உள்ள நம்பிக்கை குறைந்துள்ள நிலையில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மீது நம்பிக்கையில்லா பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# பொருளாதார நிலைமை தொடர்பில் வருடத்தின் நடுவில் அறிக்கை தேவை

## சம்பிக்க ரணவக்க வலியுறுத்து

2023ஆம்ஆண்டின்அரச நிதிபொறுப்புமுகாமைத்துவச் சட்டத்தின் கீழ் நிதி மற்றும் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக நாடாளுமன்றத்திற்கு வருடத்தின் நடுப்பகுதியில் அறிக்கை ஒன்றை தாக்கல்செய்யவேண்டுமென குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். குறித்த விடயம் சம்பந்தமாக அவர் நேற்று செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

2023ஆம் ஆண்டின் அரச நிதி பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் நிதி மற்றும் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக அரசாங்கம்அறிக்கைஒன்றை தாக்கல் செய்துள்ளது. இது தொடர்பான அண்மையில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. எனினும் இதன் மூலம் ஏற்படும் விடயங்கள் தொடர்பாக முக்கியமான விவாதங்கள் நாட்டில் ஏற்படவில்லை. இதனால், இந்தஅறிக்கையின் விபரங்களுடன் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமை கறித்து கவனம் செலுத்த வேண்டும் எனநாங்கள்எண்ணினோம்.

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 11.5 வீதமாக குறைந்துள்ளது. இது மிகவும் பயங்கரமான நிலைமை.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், மகிந்த ராஜபக்ச அரசாங்கம் முன்னெடுத்த பொருளாதார நிலைமைவீழ்ச்சியடைந்ததாக 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது, நிபுணர்கள் என்றுகூறிக்கொண்டவியத்மக அமைப்பில் இருந்தவர் தெரிவித்தனர். 7சதவீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3 வீதமாக குறைத்ததாக கூறினர். கோட்டாபயவை கொண்டு வந்து மீண்டும் 7 வீத பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவோம் என்றும் கூறினர். இதுவே அவர்கள் நாட்டுமக்களை ஏமாற்ற நாடு முழுவதும் முன்னெடுத்த பிரசாரம்.

இறுதியில் என்ன நடந்துள்ளது. 7சதவீத பொருளாதார வளர்ச்சியும் இல்லை. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இருந்த 3சதவீத பொருளாதார வளர்ச்சி வேகம் கூட மகிந்த அரசாங்கத்தின் காலத்தில் இருக்கவில்லை. 11.5சதவீதம் என்ற எதிர்மறையான பொருளாதாரவளர்ச்சிவேகமே



இருந்துள்ளது.

நாட்டின் பொருளாதரம் மீண்டும் வேகமாக வீழ்ச்சியடையும். 90 பில்லியன் டொலர்களாக இருந்த நாட்டின் பொருளாதாரம் தற்போது 80 பில்லியனை விடவும் குறைந்துள்ளது. இதனால், நாடு படிப்படியாக பின்நோக்கி செல்லும். பொய்யான பொருளாதார இலக்கங்களை கூறும் வாய் பேச்சு வீரர்கள் மீண்டும் வரலாம். எந்த வேலைகளையும் செய்யாத, முன்னேற்றங்களை காண்பிக்காதவர்கள் பொருளாதார விற்பன்னர்கள் போல் வந்து உரைகளை நிகழ்த்தலாம். இது குறித்து கவனமாக இருக்குமாறு நாங்கள் மக் களை கேட்டுக்கொள்கிறோம் - என்றார்

# தொழில்நுட்ப கல்லூரி மாணவன் மாடியிலிருந்து விழுந்து காயம்

*தியகம தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் ஒருவர் விடுதியின் 3 ஆவது மாடியிலிருந்து விழுந்து பலத்த காயங்களுக்குள்ளானநிலையில், ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.*

*குறித்த மாணவன் அந்தக் கல்லூரியின் தகவல் தொழிநுட்பத்துறையில் 3 ஆம் வருட மாணவன் என கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு காயங்களுக்குள்ளான மாணவன் ரிகில்லகஸ்கட பிரதேசத்தில் வசிப்பவர் ஆவார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹதுடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*

# அம்பாறை மாவட்டத்தில் புதிய புற்களை தேடி உண்டு வரும் யானைகள் கூட்டம்

யானை கூட்டம் ஒன்று வேளாண்மைஅறுவடையின் பின்னர் புதிதாகமுளைக்கின்ற புல்இனங்களைஉண்பதற்காக நாடி வருகின்றன.

அம்பாறைமாவட்டத்தில் வெள்ளிக்கிழமை நேற்று (சனிக்கிழமை) காலை திடீரென நாவிதன்வெளி சொறிக்கல்முனை பகுதிகளை ஊடறுத்து யானைகள் இவ்வாறுவருகைதந்துள்ளன.

இதன்போது, குறித்த யானைகள் அங்குள்ள புதிய புல் இனங்களை உண்ணுவதுடன் கூட்டத்தில் உள்ள யானை குட்டிகள் விளையாடுவதையும் காண முடிந்தது. சனிக்கிழமை சுமார் பெரிய யானைகள் மற்றும் குட்டிகள் என 12 இற்கும் அதிகமான யானைகள் அப்பகுதியில் உள்ளஅறுவடைசெய்யப்பட்ட வயல் நிலங்களை நோக்கி வருகை தந்திருந்தன.

தினமும் அப்பகுதிக்கு வரும் யானை கூட்டத்தை மக்கள் பார்வையிட்டு வருகின்றதுடன், இவ்வாறு வயல்வெளிகளை நோக்கி வருகைதந்துள்ளயானைகள் ஊருக்குள்பிரவேசிக்கமுடியாத வகையில்பார்வையாளர்களாக உள்ள மக்கள் சத்தங்களை எழுப்பிய வண்ணம் உள்ளனர். மேலும் இந்தப் பிரதேசத்தில் அண்மையில் வேளாண்மைஅறுவடைமேற்கொள்ளப்பட்ட நிலையில் தீ வைக்கப்படுவதாலும் அங்கு கொட்டப்படும் குப்பைகளைதினந்தோறும்30 இற்கும்மேற்பட்ட யானைகள் உண்ணுவதற்கு வருகைதருவதுடன் அருகில் உள்ள பொதுமக்களின் உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## நாட்டின்....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்த அதிகாரப் போட்டியில் சிக்கிக் கொள்ளாமல், பக்க சார்பின்றி முன்னேற வேண்டும். அங்கு நமது பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

பல நாடுகள் உள்நாட்டு அச்சுறுத்தல்களைஎதிர்கொள்கின்றன. குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற உள்நாட்டுஅச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. இதற்கு நாமும் தயாராக வேண்டும்.

இன்று நாம் உலக அரசியலில் தொடர்புபட்டுள்ளோம். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதைப் பற்றி சிந்திக்க வேண்டும். அவ்வாறானால்,எமதுநாட்டின்எதிர்கால தேசிய பாதுகாப்பு குறித்து மீளாய்வு செய்ய நான் எதிர்பார்க்கிறேன்.

ஐரோப்பாவில் உள்ள ஒவ்வொருநாடும்ஒவ்வொரு ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்குஒருமுறைஇத்தகைய மீளாய்வை செய்து வருகின்றன. நாட்டிற்கு எத்தகைய அச்சுறுத்தல்கள் உள்ளன? நாட்டின் வளங்கள் என்ன? அவற்றை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பது குறித்து அவர்கள் மீளாய்வு நடத்துகின்றனர். அதற்கேற்ப அவர்களது இராணுவ பலத்தையும் பொருளாதார பலத்தையும் ஒப்பிட்டு பார்த்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன.நாமும் அது குறித்துகவனம்செலுத்த வேண்டும்.

இன்று, டோனர்போன்ற பல நவீன தொழில்நுட்ப சாதனங்கள் உள்ளன. இந்து சமுத்திரத்தில் நீர்மூழ்கிக் கப்பல்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. எனவே, நமது கடல் பாதுகாப்புக்காக, நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், விமானங்கள் மற்றும் டோனர்கள் எதிர்காலத்தில் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்று எம்மால் கூற முடியாது. இன்றைய காலத்தை விட எதிர்காலத்தில் அதிக தொழில்நுட்பம்பயன்படுத்தப்பட வேண்டியிருக்கும்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, துரித வளர்ச்சியை எட்ட முடிந்தால், அதற்குத் தேவையான பணத்தை செலவிட முடியும். வறிய நாடாக எம்மால் இவற்றைச் செய்வது கடினம். எதிர்கால சவால்களை கடந்த காலத்திலிருந்து எதிர்கொள்ள முடியாது.

எனவே, இந்த நாட்டில் தேசிய பாதுகாப்பு குறித்து மீளாய்வு செய்ய எதிர்பார்க்கிறேன். புதிய பொருளாதாரப் போக்குகள் மற்றும் கால நிலை மாற்றம் குறித்து கவனம் செலுத்தி இந்த மீளாய்வு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். அறிக்கை கிடைத்த பிறகு, தேசிய பாதுகாப்பு சபையின் நவீன பாதுகாப்பு கொள்கைகளை தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

'Defense 2030'எனும் இந்தஅறிக்கையைதயாரிக்க மேஜர்ஜெனரல்(ஓய்வுபெற்ற) சன்ன குணதிலக்கவின் தலைமையில் மீளாய்வுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதற்காக தனியான அலுவலகமும் அமைக்கப்பட்டுள்ளது. எதிர்கால சவால்களை ஆயுதங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்த முடியாது. மேலும், அதை பணத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தவும் முடியாது.

அதேபோன்று, உங்களின் நலன்புரி குறித்தும் இராணுவ சேவைக்குப் பிறகு உங்களின் நலன் குறித்தும் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். உங்கள் அர்ப்பணிப்பை நாங்கள் பாராட்டுகிறோம். புதிய பாதுகாப்பு மீளாய்வில் அதனை இணைப்பதற்கு எதிர்பார்க்கிறோம் என்றார்.

## வடக்கிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றபோதும் இன்று முதல் பலஎரிபொருள்பலஎரிபொருள் நிலையங்கள் இதற்காக தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட எரிபொருள் விற்பனைநிலையங்களில் சினொபெக் எரிபொருள் விற்பனைநாடுமுழுவதும் இடம்பெறவுள்ளநிலையில் வடக்கிலும் 7 எரிபொருள் நிலையங்களில் இந்த சினொபெக் எரிபொருள் விற்பனைக்கு ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

இதற்கமையவடக்கில் தேர்வான 7 எரிபொருள் விற்பனைநிலையங்களில்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 எரிபொருள் விற்பனைநிலையங்களும், கிளிநொச்சி, வவுனியா

மன்னார் ஆகிய மூன்றுமாவட்டங்களிலும் தலா ஒரு எரிபொருள் விற்பனை நிலையமும் தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணத்தில் சுன்னாகம், தாவடி, திருநெல்வேலி மற்றும் நாவற்குழி ஆகிய எரிபொருள் விற்பனை நிலையங்களும்கிளிநொச்சியில்ஏ9வீதியின் இயக்கச்சியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையமும் தேர்வாகியுள்ளது.

இதேபோன்று வவுனியா மாவட்டத்தில் ஏ9 வீதியின்கனகராயன்குளம் பகுதியில்உள்ளஎரிபொருள் விற்பனையகத்துடன் மன்னார் மாவட்டத்தில் மடு தேவாலயம் அருகே உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்திலும் இந்த சினொபெக் எரிபொருள் விற்பனை இடம்பெறவுள்ளது.

## 5 ஆயிரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்கள் ஆசிரியர் தொழிலை முற்றிலுமாக விட்டுவிட்டு வெளிநாடு செல் லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுநாட்டில்கல்வியில் கடுமையாகப் பாதிக்கிறது.

சேவையை விட்டு வெளியேறிய ஆசிரியர்களில் பெரும்பாலானோர் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களின் போதிப்பவர்கள் ஆவர்.இப் பாடங்களுக்கு இருக்கும்ஒரேயொருஆசிரியரை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், பல பாடசாலைகளுக்கு இந்நிலைமைபாதிப்பைஏற்படுத்தியுள்ளது.

இவ்வருடம் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதில்லையென ஆளும் தரப்பு தீர்மானித்துள்ள நிலையில், இந்த வருட இறுதியில் மேலும் 5000 ஆசிரியர்கள் ஓய்வுபெறவுள்ளனர்.

இக்காரணங்களால் இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினரை அறிவு, திறமை, மனோபாவம் போன்றவற்றால் போஷிக்கப்பட்ட ஒரு குழுவாக மாற்றுவது சிக்கலாக இருக் கும்.

ஏறக்குறைய 40,000 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவும்போது, இவ்வாறானஓய்வுமற்றும் ஆசிரியர்தொழிலைவிட்டு வெளியேறுவது பாரதூரமான முடிவுகளைத் தருகின்றது.

அரச ஆட்சேர்ப்பு வேறு துறைகளுக்கு மேற்கொள்ளப்படாவிட் டாலும் கூடுமானவரை ஆசிரியர் வெற்றிடங்களைநிரப்புவது அரசா ங்கத்தின் பொறுப்பாகும்.

இலங்கை ஆசிரியர்கள் அலை அலையாக வெளி நாடுகளுக்குச் சென்று சம்பளமின்றி விடுமுறை எடுப்பதைத் தடுக்க அரசாங்கம் உடனடியாக தலையிட்டு சம்பள முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வந்து அவர்களைத் தக்க வைத்து ஆசிரியர்கள் வாழ வழிவகை செய்ய வேண்டும் - என்றுள்ளது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2023இல் வெளியிடப்பெற்றது.